பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 04 புதன்கிழமை (17-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:143

# குடாநாட்டில் இன்று பொங்குதமிழ் எழுச்சி

## லட்சக்கணக்கில் மக்கள் திரள்வர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்17

**மரபுவழித் தாயகம், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பனவே தமிழ்மக்களின் அபிலாஷைகள் என்பதை வலியுறுத்தியும் -**

**தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் அரசு உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரியும் -**

**இன்று யாழ்ப்பாணத்தில் 'பொங்குதமிழ்' நிகழ்வு பெரும் எழுச்சியுடன் இடம்பெறவிருக்கின்றது.**

பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்.மத்திய பேருந்து நிலையம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் இருந்து எழுச்சிப் பேரணிகளுடன் 'பொங்குதமிழ்' நிகழ்வு ஆரம்பமாகும்.

இந்தப் பேரணிகள் யாழ்பல்கலைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழில் பங்கேற்பதற்காக புதுவைஇரத்தினதுரை வருகை

### சமாதானத்துக்கான இசைக்குழுவும் வந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.17

இன்று மருத்துவ பீட மைதானத்தில் இடம்பெறும் 'பொங்குதமிழ்' நிகழ்வில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் போராளிகள்குழு பங்குபற்றவிருக்கிறது.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம வந்துள்ள இதய சுத்தியான சமாதானத்துக்கான இசைக் குழுவும் இந்த நிகழ்வில் பங்குபற்றவிருக்கிறது.

இந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றே போராளிகள் நிகழ்வில் பங்குபற்ற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இதய சுத்தியான சமாதானத்துக்கான இசைக்குழுவின் நிகழ்ச்சி இங்கு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு தொடர்பான செய்திகளைச் சேகரிக்க வன்னியில் இருந்து ஊடகவியலாளர் குழுவொன்றும் இங்கு வந்துள்ளது.

இதேவேளை - பொங்குதமிழ் நிகழ்வில் பங்குபற்ற மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தலைமையிலான முன்னணியின் உறுப்பினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுதக் கடத்தல்கள் தொடர்வது ஆச்சரியத்தைத் தரவில்லை என்கிறார் ரணில்

### 'ரைம்' சஞ்சிகைக்கு அவர் பேட்டி

கொழும்பு,ஏப்.17

"புலிகளின் ஆயுதக் கடத்தல் வலையமைப்பு இன்னும் செயற்படுவதாகவே எமது புலனாய்வுத் தகவல்களும் கூறுகின்றன. ஆனால் அது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை."

- இப்படிக் கூறியிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து 'ரைம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தனித் தமிழ்நாடு ஒன்றைக் கோரும் யோசனையைக் கைவிடுவது பற்றிய விவகாரத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் நிச்சயமில்லாத ஒரு நிலைப்பாட்டில் இருப்பார் என்றே நான் எதிர்பார்த்தேன்.

பொருத்தமான மாற்று ஏற்பாடுகளைத் தாங்கள் எதிர்பார்ப்பதாகப் புலிகள் நோர்வேத் தரப்பிடம் தெரிவித்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தின் பல இடங்களிலும் புலிகளை வரவேற்றுக் கட்டப்பட்ட பதாகைகள், கொடிகள் அறுப்பு!

### 'பிக்கப்'பில் வந்த குழு இரவுவேளை அட்டகாசமாம்

ஊர்காவற்றுறை,ஏப்.17

விடுதலைப் புலிகளை வரவேற்று தீவகத்தில் கட்டப்பட்டிருந்த பதாகைகளையும் சிவப்பு மஞ்சள் கொடிகளையும் அறுத்தெறிந்தும் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தை உடைத்தெறிந்தும் இனந்தெரியாத குழு ஒன்று நேற்றுமுன்தினம் இரவு அட்டகாசம் புரிந்துள்ளது.

நள்ளிரவு 11.45 மணியளவில் 'பிக்கப்' வாகனம் ஒன்றில் சீருடையில் வந்தவர்களே இத்தகைய அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாகத் தீவுப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வேலணைதுறையூர், புளியங்கூடல், பொன்னாச்சி கடைச்சந்தி, நாரந்தனை, ஊர்காவற்றுறை சந்தி போன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி செல்லும் மக்களுக்கு உள்நுழைவு அனுமதிப்பத்திரம்

### புதிய நடைமுறை அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்களுக்கு உள்நுழைவு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுமாலை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்ட பின்னர் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி தமிழ்வாணன் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.17

மறைந்த பிரபல எழுத்தாளர் 'கல்கண்டு' தமிழ்வாணனின் மகனான ரவி தமிழ்வாணன் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

எதிர்வரும் வியாழக்கிழமையே அவர் இங்கு வருவதாக இருந்தது. ஆனால் திடீரென இன்று இங்கு வருகிறார். பல நிகழ்வுகளிலும் அவர் பங்குபற்றுவார்.

(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்) (ம-3)

## நிதிபெறும் நடவடிக்கைகளில் மக்கள் விருப்புக்கேற்ப தளர்வு

### ஏற்படும் என்கிறார் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,ஏப்.17

எமது பொருளாதாரம் மேம்பட தற்போது நடைமுறையில் இருந்து வரும் நிதிபெறும் நடவடிக்கைகளில் எமது மக்களின் விருப்புக்கமைய தளர்வு ஏற்படும் என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ். வணிகர்களுடன் நடந்த சந்திப்பில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது போராளிகளைப் பராமரிக்கவும் எமது இயக்கத்தின் தேவைகளை பூர்த்தி செய்யவும் எமது பகுதிகளில வணிகர்களிடமிருந்து நிதி பெற்றுவருதை வணிகர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கலான வழக்குகளை கைவிடுவது பற்றி மூவர் குழு ஆராய்ந்து வருகிறது

### அமைச்சர் ஜயலத்துக்கு சட்டமா அதிபர் கடிதம்

கொழும்பு,ஏப்.17

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைக் கைவிடுவது குறித்து ஆராய சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்து புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் கடிதமொன்றின் மூலம் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நிலைமைபற்றி சட்டமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு,ஏப்.17

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து புலிகள் மீதான தடைநீக்கம் குறித்த மிகத் தீர்க்கமான பேச்சுக்கள் அடுத்த சில தினங்களில் நடைபெறவிருக்கின்றன என்று அரசதரப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இந்தப் பேச்சுக்களில் அரச தரப்பைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர்கள் கலந்துகொள்ளவா என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு பல பொது அமைப்புக்கள் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு பொதுஅமைப்புக்கள், சமய நிறுவனங்கள் அறிக்கைகளை விடுத்துள்ளன.

பொதுஅமைப்புக்களும், அவை விடுத்துள்ள அறிக்கைகளும் வருமாறு:-

### அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் இவையே தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த அபிலாஷைகள் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட 17-01-2001 அன்று 'பொங்குதமிழ் எழுச்சி' மூலம் பிரகடனப்படுத்த முயன்றபோது அப்போதைய அரசு மக்கள் எழுச்சியை அடக்கி இந்நிகழ்வை இருட்டடிப்பு செய்ய முயற்சித்தது.

ஆனால் அதே ஆண்டு டிசெம்பர் ஐந்தாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் வாக்குரிமை மூலம் தமது எழுச்சியை வெளிப்படுத்தினர். அதேபோன்று தென்னிலங்கையிலும் சிங்கள மக்கள் சமாதானத்திற்கான தீர்வாக தேர்தல் முடிவை மாற்றி அமைத்தனர்.

இதன் முதற்படியாக ஆட்சிக்கு வந்த புதிய அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமாக நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டு தற்போது நேரடிப் பேச்சிற்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த முடிவை அரசிற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்தியம்பும் முகமாக இலங்கையின் பல பாகங்களில் தற்போது பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெற்றுவருகின்றது.

இதன் தொடர்ச்சியாக இன்று யாழில் நடைபெற இருக்கும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் அனைத்து தமிழ்பேசும் மக்களும் கலந்துகொண்டு ஒன்றுபட்டு எமது அபிலாஷைகளை அரசிற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டுவோம் என்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கேட்டுகொள்கின்றது - என்று கூறப்பட்டுள்ளது.

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றில் முழு இனத்தையும் ஒருங்கிணைத்து ஒரே குரலில் இன உரிமைக்காக பேச வைத்த திருப்புமுனையாக அமைந்தது பொங்குதமிழ் நிகழ்வாகும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது.

பொங்குதமிழ் நிகழ்வு முதன்முதலில் கடந்த ஆண்டில் நடைபெற்ற சமயமும் கூட்டுறவுத்துறை தனது பங்களிப்பை ஆற்றியது. அதேபோல இம்முறையும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவுத் துறையினரான நாம் இன்று நடைபெறும் நிகழ்வில் முழுமையாக கலந்துகொண்டு எமது இனத்தின் அபிலாஷைகளை வலியுறுத்தி நிற்போம் - என்றுள்ளது.

### யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

யாழ்.குடாநாட்டில் இன்று நடைபெறும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு தமிழ்த் தேசியத்தின் அவசியத்தை வெளிப்படுத்துவதற்கான சாதனமாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே தமிழ் தேசியத்தை வெளிப்படுத்துவதற்கான நிகழ்வுகள் ஆரம்பித்துவிட்டன என்றே கூறவேண்டும். ஆரம்ப காலங்களில் சாத்வீக ரீதியாக தமிழ் தேசியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை அன்றைய தமிழ்த் தலைவர்கள் நடத்தினர்.

எனினும் இதற்கு மதிப்பளிக்கத் தவறிய அரசு, பதிலாக தமிழ் மக்களை இந்நாட்டின் இரண்டாம் தர மக்களாக கருதி வந்ததுடன், உயர் கல்வி உரிமை மற்றும் வேலைவாய்ப்பு பெறுகின்ற உரிமையையும் மறுத்து வந்தது. இதற்கு மேலாக தமிழ் மக்களின் மீது தொடர்ச்சியான இனக்கலவரங்களை தூண்டிவிட்டது.

இவற்றின் விளைவு சாத்வீகப் போராட்டத்துக்குப் பதிலாக ஆயுதப் போராட்டமே தமிழ் தேசியத்தை உறுதிப்படுத்தும் கருவியென எண்ணிய தமிழ்மக்கள் அதனை நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் தமிழ மக்கள் எத்தனையோ சோகங்கள் மதியில் தியாகங்கள் பல புரிந்துள்ளனர் - என்று அதில் உள்ளது.

### வடபிராந்திய இந்துப் பேரவை

கடந்த வருடம் யுத்த சூழ்நிலையில் - தடை செய்யப்பட்ட நிலையில் - பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

யுத்த சூழல் காரணமாக மக்கள் முழுமையாக பங்கேற்று தமது ஆதரவினை வெளிப்படுத்த முடியாதநிலை அப்போது நிலவியது. ஆனால இம்முறை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இலங்கைத் தீவின் யுத்தம்நிறுத்தப்பட்டு, ஓரளவு அச்சமற்ற சமாதானச் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் மக்கள் தமது நல்லாதரவை சுயாதீனமாக வெளிப்படுத்தக் கூடிய ஒரு நிலைமை தற்போது காணப்படுகின்றது.

எனவே, "தமிழர்களது சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தனித் தேசிய இனம், தமிழர்களுடைய பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள், நிலையான சமாதானத்துக்கான விருப்பு" என்பவற்றை முழு உலகுக்கும் வெளிப்படுத்தும் வகையில் இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், இந்துக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு தமிழர் தம் ஒற்றுமையை 'யாழ்ப்பாணத் தமிழரசு நிலை பெற்றிருந்த தமிழர்களின் தலையாய சிறப்புடைய யாழ்ப்பாண மண்ணில்' வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று அதில் உள்ளது.

### யாழ்.ஆயரின் செய்தி

பொங்குதமிழ் எழுச்சிக் கூட்டங்கள் இலங்கை முழுவதும் கோலாகலமாக நடைபெறுவது தமிழ்மக்களின் எழுச்சியையும், இன, மொழிப்பற்றையும், கலைகலாசார விருப்பையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. தமிழ்மக்கள் சமாதானத்தையும் விடுதலையையும் விரும்புகிறார்கள் போரையும் அதன் கொடிய விளைவுகளையும் வெறுக்கிறார்கள் என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்துகின்றது.

மிக நீண்டகாலமாக தம் உள்ளத்து எண்ணங்களையும் மன நிலைகளையும் மகிழ்வின் வெளிப்பாடுகளையும் வெளிக்காட்ட முடியாது, துன்பத்திலும் துயரத்திலும் நாள்களை செலவு செய்த தமிழ் மக்களுக்கு இப்பொங்கு தமிழ் நிகழ்வு இன உணர்வையும் விடுதலை வேட்கையையும் மகிழ்வின வெளிப்பாடுகளையும் வெளிக்கொணரும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

இப்பொங்குதமிழ் நிகழ்வை தமிழ மக்களின் ஒருமைப்பாட்டையும் தமிழ மொழி, கலைகள், கலாசாரத்தின்பால் தமிழர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றையும் தென்பகுதிவாழ் சிங்கள மக்களுக்கும் ஏன் உலகெங்கும் வாழும் மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டும் ஒரு நல்நிகழ்வாக தமிழ் மக்கள் பயன்படுத்தவேண்டும்.

பொங்குதமிழ் நிகழ்வு வெறும் உணர்ச்சிபூர்வமான நிகழ்வாக மட்டும் அமையாது, தமிழர்களின் நல்வாழ்விற்கு பயன்படக்கூடிய பல செயற்பாடுகளுக்கு வழிகோல வேண்டுமென அழைப்பு விடுகின்றோம். தமிழ்மக்களின் நீண்டகால விடுதலைப் பயணமும் அப்பயணத்தில் அவர்கள் அனுபவித்த கொடூர நிகழ்வுகளும் அவ் விடுதலைப் பயணம் காலத்திற்குக் காலம் எடுத்த திருப்பங்கள் பற்றிய ஒரு சரித்திரம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

'தேன்மதுரத் தமிழோசை உலகெங்கும் பரவ வழிசெய்ய வேண்டும்' என்பதற்கொப்ப இப்பொங்குதமிழ் நிகழ்வுகள் உலகெங்கும் வாழ் தமிழ்மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கவும் தமிழின் பெருமையை பறைசாற்றவும் தமிழர்களின் நீண்டகாலப் போருக்கு நிரந்தர முடிவினை கொண்டுவரவும் இறையாசி வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

### யாழ்.முகையித்தீன் ஜும்மா பள்ளிவாசல்

கடந்த ஆண்டு பல்வேறு தடைகளின் மத்தியிலும் தோன்றிய பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு பல நூறு ஆயிரம் மக்கள் பங்குகொள்ளும் அளவுக்கு விரிவடைந்துள்ளமை எமது மக்களின மேல் சூழ்ந்துள்ள துயர மேகங்கள் விலகும் நேரம் உதயமாகியுள்ளதைக் காட்டுகின்றது.

கடந்த இரு தசாப்தகாலமாக அல்லலுற்று வாழும் குடாநாட்டு முஸ்லிம் தமிழ்மக்கள் இலங்கை நாட்டில் பல்வேறு திசைகளிலும் சிதறி வாழ்ந்து வரும் அவலவாழ்வுக்கு இந்நிகழ்வு ஒரு முற்றுப்புள்ளியாக அமையட்டும்.

வடக்குக் கிழக்கு தமிழ்மக்களின் மனதில் மட்டுமன்றி, இலங்கை முழுவதும் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் மனங்களில் புத்துணர்ச்சியையும், பொலிவையும் ஏற்படுத்துவதாக இந்தப் பொங்குதமிழ் அமையட்டும். இந்நிகழ்வின் மூலம் சகல பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்கள் பூரிப்படைவார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை - என்று கூறப்பட்டுள்ளது.

### நீதி சமாதான ஆணைக்குழு

இன்று உலகின் எந்தப் பகுதியிலும் இடம்பெறும் சகல அரசியல் நிகழ்வுகளிலும் சர்வதேச சமூகத்தின் செல்வாக்கு முக்கியமாக இடத்தை வகிக்கிறது என்பதை யாவரும் அறிவோம்.

தமிழ்மக்களின் பிரச்சினையை பொறுத்தவரை, சர்வதேச சமூகமானது யாழ்.மக்களின் நிலைப்பாட்டுக்கு ஒரு முக்கிய இடம்வழங்கி அதை உன்னிப்பாக அவதானிக்கிறது என்பதும் நாம் அறிந்த உண்மை.

இந்தவகையில் இன்று யாழ். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் இடம பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தென்பகுதி மக்களுக்கும் அரசுக்கும் மட்டுமன்று, சர்வதேச சமூகத்துக்குமே நாம் விடுக்கும் செய்தியாய் அமையப்போகிறது.

மக்களின் பெருந்திரளும், ஒத்த குரலுந்தான் அச்செய்தியினது உறுதியின் அளவுகோலாய் அமையப்போகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிராமிய உழைப்பாளர் சங்கம்

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்ட வரலாற்றில் உலகமே வியந்து நிற்குமளவிற்கு வரலாற்று முக்கியத்துவம் பெறப்போகும் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணிக்கு குடாநாட்டின் அனைத்துக் கிராமிய உழைக்கும் மக்களாகிய நாம் அணிதிரள்வோம்.

இன்று ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் தமிழ்த்தேசம் சமாதானத்தை விரும்புகின்றது என்பதை உலகறிந்துள்ளது. இருந்தும் மறுக்கப்பட்ட எமது அடிப்படை உரிமைகளை சமாதான வழியில் வென்றெடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி அமைந்துள்ளது - என்று அதில் உள்ளது.

### வடமாகாண ஆசிரியர் சங்கம்

பொங்குதமிழ் நிகழ்வு கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் இயல்பாகவே தமிழ்மக்கள் மத்தியிலிருந்து மேற்கிளம்புகின்ற புத்தாக்கமாகும். தமிழ்மக்களின் விடுதலைக்காக போராடுகின்ற அமைப்புகளின் இலக்குகளுடன், இந்நிகழ்வின் இலக்குகளும் சமாந்தரமாகச் செல்வது உண்மைதான். ஒரு தேசிய இனத்தின் போராட்டத்திலே இந்நிலை இருப்பது யதார்த்தமானதே.

தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக மறுப்புகளுக்கு எதிராக அவர்கள் அதிருப்தி தெரிவித்த போதெல்லாம் ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கான எதிர்பார்ப்புக்கள் புரியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

சிறிய ஒரு தீவின் உட்பிரச்சினைகள் உலகின் உன்னிப்பான கவனத்தை பெற்றுவிட்டன. இருபக்கம் இருந்தும் எத்தனையோ உயிர் இழப்புக்கள்; இன்பத்தை நுகரவேண்டிய இளைஞர்களின் இரத்தம் சிந்துதல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே அவற்றை நிறுத்த ஒன்றுபடுவோம் - என்றுள்ளது.

### சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு

தமிழ்பேசும் மக்கள் ஒரே குடையின் கீழ் தங்கள் அபிலாஷைகளை சிங்கள மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பதையே இன்றைய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

யாழ்நகரில் இன்று நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் வரவேற்கத்தக்கதும் போற்றப்படவேண்டியதுமான ஒரு நிகழ்வாகும். இருபது வருடகால இருள் சூழ்ந்த உள்நாட்டுப் போர் அனர்த்தத்தினால் இந்த நாடே பொருளாதாரரீதியில் பெருவீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட அதேசமயம், சிங்களமக்களும் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நிரந்தர யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டிருக்கும் இந்த நிகழ்வு அரசியலில் நிரந்தர நண்பர்களோ, எதிரிகளோ இல்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது - என்று அதில் உள்ளது.

### அன்னையர் முன்னணி

தமிழ்மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு சுதந்திரம் கிடைத்த காலம்முதல் தமிழ்மக்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் நீங்குவதற்கு ஏற்றகாலம் விரைவில் ஏற்படவேண்டும்.

தமிழ்ச் சமூகத்தின் ஒருமித்த குரலாக பொங்குதமிழ் நிகழ்வுகள் இடம் பெறவேண்டும் - என்றுள்ளது.

### அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கம்

கௌரவத்துடன் கூடிய சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அழைப்பே இன்று பொங்குதமிழாக பெருக்கெடுத்து நிற்கின்றது.

தமிழ்மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய ஓர் அரசியல் தீர்வு மட்டுமே நிரந்தரமானதும் கௌரவமானதுமான சமாதானத்தைப் பெற்றுத்தரும் என்ற யதார்த்தத்தை பொங்குதமிழ் உலகுக்கு வலியுறுத்துகின்றது.

இறுதித்தீர்வு எட்டப்படும்வரை சமாதானச் செயற்பாடுகள் தொடரவும் அதன்மூலம் எமது இலட்சியம் நிறைவேறவும் மக்களின் பேரெழுச்சியும் எமது அபிலாஷைகளை அடைவதில் நாம் காட்டும் உறுதி கலந்த ஒற்றுமையுந்தான் உறுதுணையாக, உந்து சக்தியாக இருக்கப்போகின்றது.

அந்தவகையில் இன்றைய பொங்குதமிழ் ஓர் எழுச்சிகரமான விடியலின் பூபாளமாக அமைந்துள்ளது - என்று அதில் உள்ளது.

### மேலதிக அரச அதிபர்

பொதிகைமலையில் பிறந்து, மன்னவர்கள் மடியில் தவழ்ந்து வளர்ந்த தமிழ் அன்னைக்கு 'பொங்குதமிழ்' விழா எடுத்து மகிழ்கின்றோம் நாம்.

எங்களுக்கென்று ஒரு கலாசாரம், எங்களுக்கென்று ஒரு நாகரிகம் என காலங்காலமாக சிறப்போடு வாழ்ந்த இனம் தமிழினமாகும். ஈழநாட்டில் எங்கள் உரிமைகளை நசுக்கி, எங்கள மண்ணை ஆக்கிரமித்து எங்களை அடிமையாக்கப் பார்த்தபொழுது புலியெனப் பாய்ந்தார் எமது தலைவணங்காத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

யுத்தத்துக்கு முடிவுகட்டி சமாதானமாக வாழ்வோம் என அழைத்த போது அதற்கும் நான் தயார் என்று நேசக்கரம் நீட்டினார் எமது தலைவர். ஆனால், எமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம், என்ன இலட்சியத்துக்காக ஆயிரமாயிரம் இளந்தளிர்களை பலியாக்கினோமோ அந்த உயிர்களது ஆன்ம இலட்சியத்தை நாம் அடைந்தே தீருவோம் என்ற நிலையிலிருந்து அவர் மாறவேயில்லை. எங்கள் இனத்தின் தியாகம் பெரிதானது. அந்த இளம் மாவீரர்களது உயிரிழப்புக்கள் சாதாரணமானதல்ல. இதைத் தமிழினம் முழுவதும் நிச்சயமாக உணர்ந்து கொள்ளுதல் மிகமிக அவசியமானது.

நாம் என்றும் ஒருவருக்கும் அடிமைகள் அல்லர். நாம் எமது மண்ணில் வீறுநடை போட்டு நடக்க வேண்டும் என்ற வீர உணர்வுகள் எமது நாடி நரம்புகளில் ஓடவேண்டும்! இத்தகைய வீர உணர்வுகள் ஏற்பட பொங்குதமிழ் நிகழ்வுகள் நிச்சயமாக நடைபெறவேண்டும். ஆகவே இன்று இடம்பெறும் பொங்குதமிழ் நிகழச்சிகள் பூரணமாக வெற்றிபெற தமிழ் அன்னையின் ஆசி கிடைக்க வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது.

### பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

தமிழினத்தின் விடிவிற்காய் சங்கநாதம் இசைத்த முதற் பொங்குதமிழ், தமிழின வரலாற்றில் புதிய திருப்பத்தை உருவாக்கி உலகத்தின் பார்வையை எம்மினத்தின் பக்கம் திருப்பி எமக்கான இயல்புநிலைச் சூழலை உருவாக்கித் தந்துள்ளது. இது எம்மினத்தின் ஒடுக்குமுறைக்குக் கிடைத்த ஒரு தளர்வு. உறவுகள் இணைந்து கொள்ளவும் புலம்பெயர்ந்தோர் தம் இருப்பிடத்தை நாடவும் கிடைத்த ஒரு விடுவிப்பே.

இவ்வியல்புநிலையில் இன்று நடைபெறும் பொங்குதமிழில் எம் உரிமைகளை வென்றெடுத்து, சுயநிர்ணய உரிமையை பெற்று தமிழினம் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து தம் நிலமதில் சுதந்திரத்துடன் வாழ்ந்து, தரணியில் புதிய சரித்திரம்படைக்க வழிசெய்ய வேண்டும் என்று எமது பனம் தொழில் வல்லுநர்கள் சார்பில் அணிதிரண்டு சிறப்பிக்க அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ம-7-5-10-12)

## அரசியல்வாதிகளும் ஆதரவு

இன்று நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு குடாநாட்டு அரசியல்வாதிகளும் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### யாழ்.மாநகர முதல்வர்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து அரசியல் நீரோட்டத்தில் கலக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகள் யாழ். மண்ணில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வேளையில் இப்பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசியல் வேறுபாடுகளின்றி யாழ். மக்கள் அனைவரும் இவ்விழாவில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று பொங்கி எழுவதன்மூலம் எமது இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் தமிழர் தாயகக் கோட்பாட்டையும் இலங்கை மக்கள் அனைவருக்கும் குறிப்பாகச் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்த இந்நிகழ்வு நல்லதொரு வாய்ப்பாக அமையும் என நம்புகிறேன்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் அனைவரும் குறிப்பாக, யாழ்.மாநகர சபை பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு இந் நிகழ்வினை அர்த்தமுள்ளதாக ஆக்க வேண்டுமென நான் பெரிதும் விரும்புகிறேன்.

இப்பொங்குதமிழ் நிகழ்வு அமைதியாக நடந்து எமது இனத்தின் நீண்டகாலப் பிரச்சினைகள் யாவும் சுமுகமாகத் தீர்ந்து மக்கள் நிம்மதியாக வாழ வழி ஏற்படவேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

### மாவை சோ.சேனாதிராஜா

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாம் புதிய சகாப்தத்தில் நுழைந்திருக்கின்றோம். தமிழ்த் தேசமெங்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமைகளை வலியுறுத்தி மக்கள் எழுச்சிகொண்டு பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசிய இனத்தின் மாற்ற முடியாத அத்தியாவசியமான அடிப்படைக் கோட்பாடுகளாய் விளங்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் மலைப் பிராந்தியத்தில் 'டார்மிகன்' இராணுவ நடவடிக்கை

## பிரிட்டிஷ் கடற்படை தொடங்கியது

லண்டன்,ஏப்.17

நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் படையினர் இணைத் தாக்குதல் ஒன்றை தென்கிழக்கு ஆப்கான் மீது



தொடக்கியுள்ளனர்.

தலிபான் மற்றும் அல்கெய்டா நிலைகள் மீது பிரிட்டிஷ் கடற்படையின் 3 அணிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இத்தாக்குதலுக்கு 'டார்மிகன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்

'போக்லாண்ட்' போருக்குப் பின்னர் - 20 வருடங்கள் கழித்து - பிரிட்டிஷ் கடற்படைக் கொமாண்டோக்கள் தாக்குதலில் ஈடுபடுவது இதுவே முதற்றடவையாகும். செங்குத்தான, பனிபடர்ந்த கிழக்கு ஆப்கானின் மலைப் பிரதேசத்தில் தாக்குதலை மேற்கொள்ள பிரிட்டிஷ் படையினர் பல வாரங்களாகப் பயிற்சி பெற்றதாகவும் -

விசேட பயிற்சி பெற்று அவர்கள் அல்கெய்டாவின் குகைப் பகுதிகளை நிர்மூலம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் -

பிரிட்டிஷ் இராணுவ தகவல் தொடர்பாளர் கூறியுள்ளார்.

எதிரணியினர் பலம் பற்றி வினவப்பட்டபோது, தாக்குதல் முடியும் வரை அதுபற்றி எதுவும் கூறமுடியாது என்று அவர் சொன்னார்.


ஆப்கான் வெளிவிவகார அமைச்சர் இதுபற்றிக் கூறும்போது அல்கெய்டா படையினரின் போராட்டத் திறன் குறைவடைந்தபோதிலும் பிரிட்டிஷ் படையினர் கடுமையான பணியை செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்றுத் தொடங்கிய தாக்குதலில் பிரிட்டிஷ் படையினரில் ஒருவர் காயமடைந்ததாகவும், மற்றுமொருவர் காலின் ஒரு பகுதியை இழந்ததால் சிகிச்சைக்காகத் தாயகம் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# பத்திரிகை ஆசிரியர் சிம்பாப்வேயில் கைது!

ஹராரே,ஏப்.17

சிம்பாப்வேயின் ஒரே தனியார் பத்திரிகையின் ஆசிரியர் கைது செய்யப்பட்டார். கடந்த மாதம் இடம்பெற்ற அதிபர் பதவிக்கான தேர்தலின் முடிவு பற்றி 'டெய்லி நியூஸ்'



2001 ஆம் ஆண்டு 'டெயிலி நியூஸ்' பத்திரிகை அலுவலகம் குண்டு வீச்சுக்கு இலக்கானபோது எடுத்தபடம். (உள்படம் ஜெவ் நயரோடா)

என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்ட விமர்சனத்துக்காகவே அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஜெவ் நயரோடா கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளில் நயரோடா 5 தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீது பொய்த் தகவல்களைப பரப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் இரண்டு ஆண்டுகள் வரை அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். (ஒ)

# அரபாத்தின் நெருங்கிய சகா இஸ்ரேலியப் படையால் கைது!

ரமழா,ஏப்.17

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் பதாஹ் இயக்க முக்கியஸ்தர்களில் ஒருவரும், அரபாத்தின் நெருங்கிய சகா என்று கருதப்படுபவருமான பராஹௌட்டி என்பவரை தாம் கைதுசெய்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

வடக்கு ரமழாவில் உள்ள பராஹௌட்டியின் வீட்டில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டதாக நேரில் கண்டோர் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், இஸ்ரேலியப் படையினரிடம் அவர் சரணடைந்ததாக இஸ்ரேலிய தேசிய வானொலி தெரிவித்தது.

மேற்குக்கரையில் உள்ள பலஸ்தீன நகரங்கள் மீது இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை தொடங்கிய கடந்த இரு வாரங்களில், கைது செய்யப்பட்ட அதி உயர் பலஸ்தீனத் தலைவர் பராஹௌட்டி ஆவார்.

இவரது கைது தொடர்பாக மேற்குக்கரைப் பலஸ்தீனப் பாதுகாப்புத் துறைத் தலைவர் ஜெப்ரில் ரஜூப் கருத்துக் கூறுகையில், பராஹௌட்டிக்கு இஸ்ரேலியர்களால் ஏதேனும் இன்னல்கள் நேருமாயின் பாரிய வன்முறைகளுக்கு இஸ்ரேல் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் சிலவற்றுக்கு பராஹௌட்டியே காரணம் என்று இஸ்ரேல் முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பாகிஸ்தானில் பின்லேடனைத் தேட அனுமதி கோருகிறது அமெரிக்கா

வாஷிங்ரன்,ஏப்.17

பாகிஸ்தானின் எல்லைப் புறத்தில் ஒஸாமா பின்லேடன் மறைந்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில், அப்பிரதேசத்தில் தேடுதல் மேற்கொள்ள பாகிஸ்தானிடம் அமெரிக்கா அனுமதி கோரியுள்ளது.

கடந்த மாதம் அமெரிக்கப் படையினிடம் சிக்கிய அல்கெய்டா தீவிரவாதிகள் 29பேரிடம் நடத்திய விசாரணையில் பின்லேடன் பாகிஸ்தானின் எல்லைப்புறப் பகுதியில் மறைந்திருப்பது தெரியவந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் கூறுகிறது. இதனையடுத்தே பாகிஸ்தானில் தேடுதல் நடத்த அமெரிக்கா அனுமதி கோரியுள்ளது.

இதேசமயம், பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவம் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிப்பதற்கு பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷரப் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் எல்லைப் புறப் பகுதியில் வசித்துவரும் பழங்குடி மக்கள் தலிபான்கள் மீது அனுதாபம் கொண்டிருப்பதாகவும் -

அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்பதன்மூலம் பழங்குடியினரின் கோபத்துக்குத் தான் ஆளாகவேண்டி நேரிடலாம் என்று முஷரப் அஞ்சுவதாகவும் -

அவதானிகள் கருதுகின்றனர்.

ஆயுதப்பயிற்சி பெற்ற பழங்குடியினர் பாகிஸ்தானின் எல்லைப் பகுதிகளில் சுயாட்சி நிர்வாகத்தை மேற்கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 3 அமெரிக்க வீரர்கள் பலி!

காபூல்,ஏப்.17

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் 3 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

கந்தகார் அருகே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இதில் உயிரிழந்த அமெரிக்க இராணுவத்தினர் மூவரின் சடலங்களும் நேற்று விமானம் மூலம் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஆப்கானிஸ்தானில் உள்ள கூட்டுப்படையின் பேச்சாளர் இந்தச் சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் கூறியபோது, குண்டுவெடிப்பு தீவிரவாதிகளின் தாக்குதலின்போது இடம்பெற்றதா? அல்லது தற்செயலாக நிகழ்ந்த விபத்தா? என்பதைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளின் மீதான 'அனகொண்டா' இராணுவ நடவடிக்கையை அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படையினர் கடந்த மாதம் தற்காலிகமாக நிறுத்திக்கொண்ட பின்னர் ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டுப் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# துல்க்ராம் நகரை மீண்டும் இஸ்ரேலியப் படை ஆக்கிரமிப்பு!

ஜெருசலேம்,ஏப்.17

மேற்குக்கரை நகரான துல்க்ராமுக்குள் மீண்டும் இஸ்ரேலிய டாங்கிகளும் கவசவாகனங்களும் நுழைந்துள்ளன. ஒரு வாரத்தின் முன்னர் இந்த நகரில் இருந்து விலகிய இஸ்ரேலியப் படையினர் தற்போது மீண்டும் அந்த நகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பாகப் பேசிய இஸரேலிய இராணுவப் பேச்சாளர் பலஸ்தீனத் தீவிரவாதிகளை கைது செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையே இது என்று தெரிவித்தார்.

பலஸ்தீனர் மற்றும் இஸ்ரேலியர் இடையே நிரந்தர யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில ஈடுபட்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் நாடு திரும்பிய கையோடு துல்க்ராமுக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துள்ளன. இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஒருவார காலத்துக்குள் பலஸ்தீனப் பிரதேசங்களில் இருந்து தமது படைகள் விலக்கிக் கொள்ளப்படுமென பவலிடம் உறுதியளித்திருந்ததாகக் கூறப்படுகிறது.



ஜெனின் நகரில் இஸ்ரேலிய டாங்கிகளின் குண்டுவீச்சில் தகர்க்கப்பட்ட கட்டடத்தில் இருந்து சடலங்கள் மீட்கப்படுகின்றன.

இதேசமயம், பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆகியோரிடம் மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுக்களை தாம் நடத்தவுள்ளதாக கொலின் பவல் தெரிவித்துள்ளார். (ஒ)



மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்த பலஸ்தீனர் ஒருவரின் மனைவி கதறி அழும் காட்சி

# பாலியல் குற்றமிழைத்த மதகுருமாருக்கு முதல் தடவையாக பாப்பரசர் கண்டனம்

வத்திக்கான்,ஏப்.17

பாலியல் குற்றமிழைத்த கத்தோலிக்க மதகுருமார் பற்றிய தனது கண்டனத்தை முதல்முறையாக பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ரோமன் கத்தோலிக்க மதகுருமாரை, அவர்கள் மீது சுமத்தப்படும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பேச்சு நடத்த வத்திக்கானுக்கு வரும்படி அவர் அழைத்துள்ளார்.

மன்ற உறுப்பினரால் நடத்தப்படவுள்ள இப்பேச்சு அடுத்தவாரமளவில் நடைபெறக்கூடும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்கக் கத்தோலிக்கத் தேவாலய பாரம்பரிய முக்கியஸ்தர்களான நியூயோர்க் பொஸ்டன் ஆயர்கள் தமது பதவிகளை விட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர். பாலியல் குற்றமிழைத்த மதகுருமாரின் செயல்களை மறைத்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. மில்வாக்கி ஆயர் மீதும்



இதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

வேறுபல நாடுகளிலும் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை கத்தோலிக்க மதகுருமார் முகம்கொடுக்கவேண்டியுள்ளனர்.

70 வயதான பொஸ்டன் ஆயர், காடினல் பேர்னாட் லோ, தனது ஆட்சியிலுள்ள மதகுருமாரின் சிறுவர் துஷ்பிரயோகத்தால் பலத்த தலையிடிக்கு உள்ளாகியுள்ளார். அவர்களை நல்வழிப்படுத்தாமல் வெறுமனே இடமாற்றம் செய்ததாலும், சென்ற இடங்களில் புதியவர்கள் மீது அவர்கள் துஷ்பிரயோகத்தைத் தொடர்ந்து பிரயோகித்ததாலும் அவர் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளார்.

அமெரிக்காவில் மட்டும் சுமார் 3ஆயிரம் மதகுருமார் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

முன்னாள் மதகுரு ஜோன் ஜோகன் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு ஆளாகியதை அடுத்தே இந்த விவகாரம் வெளிவந்தது. ஜோகன் அவரது 20 வருட பதவிக் காலத்தில் நூறுக்கும் மேற்பட்ட சிறுவர் மீது பாலியல் குற்றமிழைத்திருக்கிறார். இதுமட்டுமன்றி இது ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியையும் தேவாலயங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. [illegible] அமெரிக்க டொலருக்கு மேலான தண்டப்பணம் செலுத்தப்பட்டிருக்கிறது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த வேலுமுருகன் தேவரஞ்சினி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.836571754V), விசேட அடையாள அட்டை (இல.091018372) என்பன வட்டுக்கோட்டை கண்ணகையம்மன் கோயில் பகுதியில் 14.04.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மூளாய் வீதியிலுள்ள லீலா ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும். (2915)

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த இளையதம்பி மாணிக்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 376751724V), விசேட அடையாள அட்டை (இல.0907017166) என்பன சுன்னாகம் சந்திக்கும் சுன்னாகம் மேற்கு அம்பனைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகத்தில் உள்ள துர்க்கா புத்தகசாலையில் ஒப்படைத்துதவவும். (2901)

390/7, ஸ்ரான்லி வீதி, புகையிரத விடுதி என்னும் முகவரியைச் சேர்ந்த மாணிக்கம் அருள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 581050755X), விசேட அடையாள அட்டை (இல.090102447), யா/மாநகரசபை அடையாள அட்டை என்பன சுண்டுக்குளிச் சந்திக்கும் கொழும்புத்துறை வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யா/மாநகரசபை சுகாதாரப்பகுதிக் காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2894)

484, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த நாகராஜா கார்த்திகா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 827192147V) 10.04.2002 அன்று வேம்படிச் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதியிலுள்ள புதிய நதியா நகைமாடத்தில் ஒப்படைத்து உதவவும். (2918)

முதலிய கோயிலடி, வட்டுக்கோட்டை மேற்கு எனும் முகவரியுடைய பொ.சிவலிங்கம் என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல. 090402496), வேரம் மூளாய் காளி கோயிலடி எனும் முகவரியுடைய புஸ்பராணி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் 05.04.2002 அன்று யாழ்ப்பாணத்துக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முதலிய கோயிலடி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.(2917)

3ஆம் வட்டாரம், புங்குடுதீவு என்ற முகவரியைச் சேர்ந்த மகேஸ்வரி சுப்பிரமணியம் (அதிபர்,யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தி.) என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.377371879V), விசேட அடையாள அட்டை, அதிபருக்கான அடையாள அட்டை என்பன யாழ்.நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 180, இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2920)

## விற்பனைக்கு

இருபாலை - கோண்டாவில் வீதி, இராஜவீதி சந்திக்கருகில் 3 3/4 பரப்பு தோட்டக்காணி கிணற்றுப் பங்குடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வீ.சோமசுந்தரம், இராஜவீதிச்சந்தி, கோப்பாய் தெற்கு. (2912)

புதிய வோசிங் மெஷின், புதிய காஸ்குக்கர்,ஹேட்டர்பம், வீட்டுத் தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ.பஞ்சலிங்கம், இல.45, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை (புங்கன்குளம் ஸ்ரேஷனுக்கு அருகில்). பார்வை நேரம்: காலை 6-காலை 9மணி வரை அத்துடன் பிற்பகல் 4-6 மணி வரை.(2883)

## கணனிகள் விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள கணனிகள் ரூபா 25,000 முதல் விற்பனைக்குள்ளன. தொடர்புகளுக்கு: K.விக்னேஸ், 100மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி: 2831 (C/21717)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்கு உண்டு. 1Kg 140/- தொடர்பு: ப.றஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (2919)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L, 10,9,8,7,6. தொடர்பு: இலக்கம் 8, பிளர்ச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்). (C/21699)

## SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம், கதைக்கப் பயில. ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (2907)

# நயினாதீவு வைத்தியசாலையில் வசதியீனம்

தென்மராட்சி,ஏப்.17

நயினாதீவு ஆஸ்பத்திரியில் நோயாளர்களை எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும். சக்கர நாற்காலி போன்றவை இல்லாததால் நோயாளர்களைக் கைத்தாங்கலாகத் தூக்கி வரும் அவலநிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வெட்டுக்காயங்களுக்கு தையல் போடும் ஊசி இல்லாததால் காயத்தற்கு சிகிச்சைபெற வருவோருக்கு சிகிச்சையளிப்பதில் பெருஞ்சிரமம் நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

இவ் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கக் கூடிய மருந்துகள், உபகரணங்கள் இல்லாததால் நோயாளர்கள் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(5-117)



இளைப்பாறிய அதிபரும், கவிஞருமான இளவாலையைச் சேர்ந்த எஸ்.அடைக்கலமுத்து அண்மையில் 'மதுரகவி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம் இது. தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் அன்னாருக்க பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஈ.செல்வராஜா, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கத் தலைவர் ஏ.ஜெ.சௌந்தரநாயகம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(படம்: இளவாலைச் செய்தியாளர்)


## பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்க வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி சீட்டிழுப்பு 2002.04.14 ஞாயிற்றுக்கிழமை மாலை பிரசே செயலக மாநாட்டு மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. இச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் இலக்கங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | : | 16828 |
| இரண்டாம் பரிசு | : | 14418 |
| மூன்றாம் பரிசு | : | 24538 |
| ஆறுதல் பரிசுகள் | : | 17712, 22860, 10560, 19212, 13118, 19973, 12236, 11465, 17795,21613. |

பரிசில்கள் எதிர்வரும் (2002.04.24) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பகுதிநாள் கூட்டத்தில் வைத்து வழங்கப்படும்.

"ஆதரவு தந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

தலைவர்,

பருத்தித்துறை பிரதேச செயலக நலன்புரிச்சங்கம். (2916)



## ஆள்சேர்த்தலுக்கான விண்ணப்பம்

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.
வடக்கு-கிழக்கு மாகாணம். திருகோணமலை.

### தேசிய கல்விக் கல்லூரியின் கட்டட வேலையை மேற்பார்வை செய்வதற்கான உத்தியோகத்தர் நியமனம்

யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியில் கட்டட வேலையை மேற்பார்வை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் இவ்வாண்டு மே மாதம் முதல் 31-12-2002வரை கடமையாற்றுவர்.

01) சிரேஷ்ட பொறியியலாளர் -
பொறியியல் பட்டதாரி பட்டம் பெற்றவர் அல்லது அதற்கும் சமனான தகைமை உடையவராகவும் 10 வருடவேலை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

02) தொழில்நுட்ப உத்தியோகத்தர் -
என்.டி.ரீ. அல்லது என்.சி.ரீ. தகைமையுடன் 5 வருட வேலை அனுபவம்.

03) எழுதுநர் (தொழில்நுட்பம்) -
க.பொ.த. (உ/த) சித்தி பெற்றவர்களும் தொடர்புடைய துறையில் வேலை அனுபவமும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாண கல்வித் திணைக்களம், செம்மணி றோட், நல்லூர் என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 25-04-2002ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

30-04-2002ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நேர்முகத்தேர்வு நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பித்தோர் சமுகமளித்தல் வேண்டும்.

க.சண்முகலிங்கம்
செயலாளர்.

(C/21736)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சோமசுந்தரம் அருணாசலம்

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆன்மா இறைவனின் பாதங்களில் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
பா.அ.ச. உறுப்பினர்களும். (2924)



யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### பயிற்சி களஞ்சிய முகாமையாளர்

மேற்படி சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் இப்பதவி சம்பந்தமான தகைமை விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தையும் ரூபா 10/- செலுத்தி வேலை நாள்களில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

களஞ்சிய முகாமையாளர் - தகைமைக் குறியீடு 1981 - 208/11
சம்பள அளவுத்திட்டம் - 208/13 - 31/99
இற்கமைய

4000 - 5550

75 x 10 - 80 x 10

விண்ணப்ப முடிவுதிகதி - 25.04.2002

பொது முகாமையாளர்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம் - வ.து,
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
16.04.2002.

(C/21738)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 - 03 - 1952



இறப்பு 18 - 03 - 2002

### அமரர் சபாரத்தினம் மகாலிங்கம்

(சாலைப் பரிசோதகர், வடபிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில்.)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த ஐயாவே! உங்கள்*
*ஆசை முகத்தை எம்மால் மறக்க முடியுமா?*
*கலகலப்பான பேச்செங்கே? முத்தான சிரிப்பெங்கே?*
*உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் நிழலாடுகின்றன!*
*வெலவெலத்துப் போனோமே உம் பிரிவு தாங்க முடியாமல்.*
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (2925)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கதிரிப்பிள்ளை

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கதிரிப்பிள்ளை 15.04.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*NO.9.Vasavat Place,*
*Colombo -06.*
*Tel. No. 078-608076.* (2922)

*தகவல்*
திருமதி தேவகி நங்கவேல் *(மகள்)*
யாழ்.பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தரைப் பாதை போக்குவரத்தில் தடைக்கற்கள் ஏனோ?

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்னெடுப்பதில் காட்டப்படும் உறுதியில்தான் அமைதித் தீர்வுக்கான முயற்சிகளின் வெற்றி தங்கியுள்ளது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகளும், அரசுத் தரப்பும் செய்துகொண்டாலும் கூட, அதன் நன்மை - தீமை புலிப் போராளிகளுக்கும் அரசுத் துருப்புக்களுக்கும் மட்டும் உரியவையல்ல. முக்கியமாக பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

"முதலில் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்; பின்னர் ஒரு நல்லெண்ணப் புறச்சூழ்நிலையில் அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்போம" என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தார்.

அதனடிப்படையில் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகவே புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்கள், பொது மக்களின் நலன் என்ற நோக்கோடு வியாக்கியானஞ் செய்யப்பட்டு, அதனடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அப்படி நடைமுறைப்படுத்தப்படுவது தான் சமாதான முயற்சிகளை வெற்றிகரமான திசையில் வழிநடத்த உதவும்.

இதைச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

அமைதியையும் சமாதானத்தையும் உதட்டளவில் வலியுறுத்திக்கொண்டு அதற்கு முரணான செயல்களில் ஈடுபடுவது வெறும் அரசியல் நாடகமாகவே மக்களால் கணிக்கப்படும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏ-9 கண்டி வீதி ஊடான போக்குவரத்து முக்கிய விடயமாக அமைகின்றது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் மிக முக்கிய ஒன்றாக விளங்கிய போக்குவரத்துச் சிக்கல் தரைப்பாதை திறப்போடு தீர்ந்துவிடும் என்றே பலரும் நம்பினர்.

பலத்த ஆரவாரத்தோடு தரைப்பாதையும் திறந்தாகி வட்டது. ஆனால், பொதுமக்கள் போக்குவரத்து கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலைமைதான்.

அரசு - புலிகள் இருதரப்பும் காலதாமதமின்றி தங்களுக்குள் கலந்துரையாடி இந்தப் போக்குவரத்துச் சிக்கலிலுள்ள இடைஞ்சல்களையும், தடைகளையும் களைய முன்வரவேண்டும்.

நீண்ட - பன்னிரண்டு ஆண்டுகள் - கால இடைவேளைக்குப் பின்னர் தரைவழிப்பாதை திறக்கப்பட்டிருப்பதால் தங்கள் உயிர் உறவுகளைப் பார்க்கவும் வேறு அத்தியாவசியப் பணிகளைப் பூர்த்தி செய்யவும் இப்பாதை ஊடாகப் போக்குவரத்துச் செய்ய பொதுமக்கள் முண்டியடிப்பர். இதன் காரணத்தை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இந்த மக்களைப் பயணஞ் செய்யவிடாது தடுப்பதை விடுத்து, அம்மக்களுக்குரிய போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதே வழமை நிலை திரும்புவதற்கு வழி செய்யும் நடவடிக்கை ஆகும்.

முகமாலை ஊடாக குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்தும் பயணம் செய்வோரின் எண்ணிக்கையை நெருக்கடி கருதி மட்டுப்படுத்துவதாக வடபகுதி இராணுவத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

இது "சப்பாத்துக்கு அளவாகப் பாதத்தை வெட்டும" வேலையே அன்றி வேறில்லை.

குடாநாட்டில் யுத்தம் புரிவதற்காகக் குவிக்கப்பட்ட நாற்பதாயிரம் துருப்புக்கள் இன்னும் அங்கு நிலைகொண்டு, தோள் தினவெடுத்த நிலையில் உள்ளன.

முகமாலையில் விஸ்தீரணமான இடவசதியும் உண்டு.

இவற்றை வைத்துக்கொண்டு தினசரி ஒரு சில ஆயிரம் பயணிகளை கையாள முடியாதா? இந்த விடயத்தில் அதிக துருப்பினரை ஈடுபடுத்துவதில் என்ன நெருக்கடி? சமாதான காலத்தில் சமாதானப் போக்கை வளர்க்கும் நடவடிக்கைகளில் துருப்புக்களை ஈடுபடுத்தாமல் வேறு என்ன வேலைக்கு பயன்படுத்தப்போகின்றார்களாம்?

ஒருபுறம் மக்கள் போக்குவரத்துக்கு முண்டியடிக்க, மறுபுறம் சனி, ஞாயிறு, புதுவருடம், போயா என்று விடுமுறை நாள்களைச் சாட்டுக்கூறி பாதையைத் தடை செய்யும் கைங்கரியம் வேறு.

முன்னர் அரச, வங்கி விடுமுறை நாள்களில் யுத்தம் புரியாமல் படையினர் வீட்டில் ஓய்வா எடுத்துக்கொண்டிருந்தார்கள் - இப்போது மட்டும் விடுமுறை கேட்பதற்கு?

விடுமுறை நாள்களில் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை வழங்காமல் அவர்களது வேலை நாள்களிலா அதற்கு அனுமதிப்பது?

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி கண்டி வீதி ஊடாகப் பொதுமக்களும், பொருள்களும் கட்டுப்பாடு, தங்குதடையேதுமின்றிப் போய்வர அனுமதிக்கப்படவேண்டும்.

அதைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது, புதிய விதிகளை விதிப்பது போன்றவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல்களாகும்.

அரசு - புலிகள் இருதரப்புமே மக்களின் நலன் என்ற கண்ணாடி ஊடாகவே இப்பிரச்சினையை நோக்க வேண்டும். அப்போதுதான் போக்குவரத்து சுமுக நிலைக்கு வரும்.

### தென்மராட்சிப் பகுதியில்

## தளபாடங்களைக் கடத்த திருடர்கள் நூதன யுக்தி

தென்மராட்சி,ஏப்.17

தற்போதைய சமாதான சூழ்நிலையால் படையினர் மற்றும் பொலீஸார் தமது சோதனை நடவடிக்கைகளைத் தளர்த்தியுள்ளதையடுத்து, தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமராத பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உடைமைகளை அபகரித்துச் செல்வதில் திருடர்கள் புதிய யுக்திகளைக் கையாண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

திருடர்கள் வீடுகளில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட கதவுகள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றை தேங்காய் மட்டைகள் ஏற்றிய டிராக்டரில் மறைத்து எடுத்துச்செல்கின்றனர்.

அண்மையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியூடாக டிராக்டரில் கொண்டுவரப்பட்ட தேங்காய் மட்டைகளைக் கட்டியிருந்த கயிறு அறுந்து தேங்காய் மட்டைகள் வீதியில் கொட்டியபோது டிராக்டர் பெட்டிக்குள் பெருமளவு கதவுகளும் தளபாடங்களும் காணப்பட்டன.

இதனை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களிடம் தெரிவித்தபோதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## முஸ்லிம் மக்களுக்காகவும் புலிகள் போராடுகின்றனர்

### சமாதானக் குழுத் தலைவர் உரை

மட்டக்களப்பு,ஏப்.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமும் முஸ்லிம் மக்களின் விடுதலைக்கான போராட்டமேயாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அக்கரைப்பற்று சமாதானக் குழுத் தலைவர் டாக்டர் எம்.ஜபார்.

சமீபத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை திறப்புவிழா அக்கரைப்பற்றில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

முஸ்லிம் மக்களும், தமிழ்மக்களும் மொழி, பொருளாதாரம் என்கின்ற பல அடிப்படை விடயங்களில் பன்னிப் பிணைந்துள்ளனர். அவர்கள் எப்போதும் ஒன்றாகவே வாழ்ந்துள்ளார்கள். இவ்விருசாராரையும் பிரிக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களிலும் போராட்டத்திற்கு முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்பு வழங்கி உள்ளார்கள். எனவே இரு இனத்தவரினதும் போராட்டமே தமிழழப் போராட்டமாகும்-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஓ-12)

### மாவனல்ல படுகொலை வழக்கு:

# ரத்வத்தைக்கும் புதல்வர்களுக்கும் விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

### மேலும் இரு சந்தேகநபர்கள் சரண்

கண்டி,ஏப்.17

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தினத்தன்று மாவனல்லையில் 10 முஸ்லிம்கள படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது இரு மகனகள் ஆகியோரின் விளக்கமறியலை தெல்தெனிய நீதிமன்ற நீதிவான் பீரதி இனொக்கா ரணசிங்க எதிாவரும 29ஆம் திகதி வரை நீடித்து உத்தரவு பிறப்பித்தார்.

இந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இரு படையினர் தாம் கொலைகள் நடந்த அன்று 'டிரக்' வண்டியை ஓட்டிச் சென்று, கொலைகளுக்கு உடந்தையாக இருந்ததை ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

23 மற்றும் 24ஆம் சந்தேகநபர்கள் தெல்தெனிய நீதிமன்றத்தில் சரணடைந்தவர்களாவர்.

தம்மைக் கடத்திச் சென்ற ஒரு குழுவினர் அடையாளம் தெரியாத ஓரிடத்தில் தம்மை அடைத்துவைத்ததாகவும் -

ரத்வத்தையின் மகன்களுக்கு இந்தப் படுகொலைகளுடன் தொடர்பிருப்பதாகக் கூறும்படி தம்மை சித்திரவதைக்குட் படுத்தி வற்புறுத்தியதாகவும் - அந்த இரு சந்தேகநபர்களும் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

(ஓ)

### யாழ்.பல்கலைக்கழக

## வெளிவாரிப் பரீட்சைகள் திங்கள் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளதாக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகினர் தெரிவித்தனர்.

2000ஆம் ஆண்டு பிரிவினருக்குரிய கலைமுதற் தேர்வு மற்றும் வணிகமாணி பகுதிI ஆகிய பரீட்சைகளே ஆரம்பமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் இப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாகவும் -

நேர அட்டவணை மற்றும் பரீட்சை அனுமதி அட்டைகளை அலுலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டது.

(ஓ-9)

## மீசாலையில் பாலர் பாடசாலை

தென்மராட்சி,ஏப்.17

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிக் கிளையின் பாலர் பாடசாலை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் மீசாலையில் உள்ள கிளை அலுவலகக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(5-117)

## கொழும்பு வைத்தியசாலையில் மருத்துவர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு,ஏப்.17

நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் மதுபோதையில் வந்த குழு ஒன்றினால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அந்த வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இந்த வைத்தியசாலையின் அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் கூட நோயாளிகள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் களுபோவில அல்லது றாகம வைத்தியசாலைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

மது போதைக்கு அடிமையாகி உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த ஒருவரைப் பார்க்கவந்த சிலரே மருத்துவரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

குற்றவாளிகள் கைது செய்யப்படும் வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அரசு வைத்திய அலுவர் சங்கம் அறிவித்திருந்தது. மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 18பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

(ஓ)

### நாளை

சித்திரை 05
வியாழக்கிழமை
(18.04.2002)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 4.04 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முற்பகல் 9.45 வரை.
ஷஷ்டி விரதம்
மரணயோகம்
சுபநேரம் : 7.33 - 9.03
ராகுகாலம்: 1.33 - 3.03
(பஞ்சாங்க நேரப்படி)

### உதயவாக்கு

பணம் உங்களுக்கு அடிமையாக இருந்தால் அதனை நீங்கள் நல்லவற்றுக்கு பயன்படுத்தலாம். பணத்திற்கு நீங்கள் அடிமையாக இருந்தால் உங்களை அது தீயவற்றுக்கு பயன்படுத்திக்கொள்ளும்

## மீன்பிடி பயிற்சிக் கல்லூரிக்கு கட்டடம் அமைக்கக் கோரிக்கை

குருநகர்,ஏப்.17

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்கு வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியை புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுகோரி கடற்றொழில் நீர்வள அமைச்சர் மஹிந்த விஜேசேகரவிற்கு பயிற்சிக் கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இக்கல்லூரியில் 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை உள்ள காலப் பகுதியில் சுமார் 384 பயிலுநர்கள் மீன்பிடிப் பயிற்சிநெறியைக் கற்று வெளியேறியுள்ளார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இக்கல்லூரிக் கட்டடம் சேதமடைந்தது. இதனால் இப் பயிற்சிக் கல்லூரி தற்போது யாழ்.பாங்ஷால் வீதியில் உள்ள ஒரு கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவருகிறது.

இத்தற்காலிக கட்டடத்தில் இதுவரை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ஏழு வெளிக்கள பயிற்சித் திட்டங்களும், நான்கு மீன்பிடித் தொழில்நுட்ப பயிற்சிகளும் வழங்கப் பட்டுள்ளன. இதுவரை 200 பேர் இப்பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள்.

ஆனால் நிரந்தரக் கட்டடம் இல்லாததனால் பயிற்சி உபகரணங்களை நிறுவி செய்முறை வகுப்புக்களை நடத்த முடியாதுள்ளது.

இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள அரச காணியில் இப்பயிற்சிக் கல்லூரியை அமைப்பின் சுமார் 2 கோடி ரூபா தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஓ-51)

## சுதுமலை, நவாலிப் பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.17

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுதுமலை, நவாலிப் பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இப்பகுதிப் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட நேரங்களில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 8.30முதல் 10 மணிவரை நவாலி வடக்கு புலவர் வீதி சனசமூக நிலையத்திலும் -

காலை 10.15 முதல் 11.15 மணிவரை நவாலி வை.எம்.சீ.ஏ. முன்றிலிலும் -

11.30 மணிமுதல் 12.30 மணிவரை நவாலி கிழக்கு முருகானந்தா சனசமூக நிலையத்திலும் -

தடுப்பூசி ஏற்றிக் கொள்ளலாம்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணிவரை சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவ கோயிலடி சனசமூக நிலையத்திலும் -

10.15 முதல் 11.30 மணிவரை தியாகசீலம் பூங்கா முன்றிலிலும் -

12 மணிமுதல் 1.30 மணிவரை ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும் -

தடுப்பூசி ஏற்றப்படும்.

(ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் அபிலாஷைகளை உரத்துக் கூறிடும் 'பொங்குதமிழ்'

**ஈழத் தமிழினத்தின் எழுச்சிமிகு குரலை உலகின் செவிகளில் ஓங்கியறையும்படி ஒலித்திடும் 'பொங்குதமிழ்' நிகழ்வு குறித்து யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தின் விளக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

பொங்குதமிழ் - ஓர் அதிசய நிகழ்வு. நீண்ட காலமாக அடக்கப்பட்ட மன ஆசைகள் உணர்வுடன் பொங்கி எழுந்தபோது அகிலத்தையே அதிரவைத்த ஒரு வரலாற்று நகர்வு.

தமிழர்களின் அபிலாஷை குறித்து சர்வதேசம் கொண்டிருந்த சந்தேகங்களை, ஊகங்களை அர்த்தமற்றதாக்கி தமிழர்களின் ஆத்ம அபிலாஷை, சுயநிர்ணயம், மரபுவழித்தாயகம், தமிழ்த் தேசியம் ஆகியவையே. என்றும் அதற்காகத் தியாகங்களைத் தாங்கிப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளே தங்கள் தலைமைச் சக்தி என்றும் ஆதாரபூர்வமாக நிருபித்துக்காட்டிய அகிலமெல்லாம் வாழும் ஈழத்தமிழ் மக்களின் ஆணை.

பல்வேறுபட்ட இடங்களில் வெவ்வேறு வாழ்வியல் முறைமைகளிடையே வாழ்ந்தபோது இந்த அபிலாஷை என்னும் விடயத்தில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாதென உணரவைத்த தமிழர்களின் ஒன்றுபட்ட உண்மையான உள்மனவெழுச்சி.

பல தசாப்தங்களாகித் தொடரும் இன நெருக்கடி உச்சம்பெற்ற வேளையில் அதை நிரந்தரத் தீர்வு நோக்கி நகர்த்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சிகளின் விளைவாக மக்களின் அபிலாஷை அல்லது மக்கள் ஆசைப்படும் தீர்வு என்ன? என்ற கேள்வி முன்னெப்போதும் இல்லாத அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அபிலாஷை(ASPIRAPION) எனப்படுவது உயிர்மூச்சொலி கலந்த மெய்யொலி எனப் பொருள்படும். அதாவது வாழ்வுக்கு ஆதாரமான உயிர்மூச்சுடன் இரண்டறக் கலந்துள்ள உண்மையின் ஓசையாகும்.

கடந்த 7 வருடங்களாக ஆக்கிரமிப்பு இராணுவத்தின் உடல், உள அடக்குமுறைகளில் எம்தேசம் திறந்தவெளிச் சிறையானது. மக்கள் மனங்களிலெல்லாம் பயம் விஸ்வரூபம் எடுத்து ஆட்சிசெய்ய - நம்பிக்கைகள் தொலைந்துபோக - ஒருவருக்கு ஒருவர் மீதான சந்தேகம் உச்ச நிலையை அடைந்தது. விளைவாக தமது அரசியல் அபிலாஷைகள் குறித்து பொது இடங்களில் கதைப்பது அருகிப்போனது.

நீண்டகாலம் பூட்டிவைத்த தேசச் சிறையில் உள்ள பொருள்களை மறைத்தது போல் அந்த அபிலாஷைகள் மக்களின் உள்மனப்படுக்கைகளிற்குச் சென்று உறங்கிப்போனது.

## பொய்யுரைகள்

அபிலாஷையை பயத்தின் காரணமாக மறந்த அல்லது வெளியிடப் பயந்த மக்கள் கூட்டத்தை சாதகமாகப் பயன்படுத்திய பேரினவாதிகள் தம் வசம் இருந்த பொய்யுரைகளை தமிழ் மக்களின் பெயரால் சிங்கள மக்களின் மீதும், சர்வதேசத்தின் மீதும் அள்ளித் தெளித்தனர். இதற்கு ஆதரவாக தமிழர்களையே அறியாத கொழும்பில் தங்கி இருக்கும் ஒரு சில சக்திகளும், மனித உரிமை என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு ஒத்தூதின. ஜனநாயகம், மனிதஉரிமை போன்ற மானுட நேசக் கோட்பாடுகளை முன்னெடுக்கும் சர்வதேசம்கூட ஓர் இனத்தின் அபிலாஷை குறித்து தெரியாதவர்களின் கற்பனைக் கதைகளை நம்பும் அல்லது நம்பியது போல் நடிக்கும் ஒரு விசித்திரமான துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

தேசமெங்கும் திறந்தவெளிச் சிறையாக மாறியபோதும் யாழ். பல்கலைக்கழகம் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானதோர் இடமாக, அதாவது வசதிகள் கூடிய சிறைச்சாலை போன்று தோன்றியது. முதலில் பல்கலைக்கழக மாணவர்கள் நம்பிக்கையான இடங்களை உருவாக்கிச் சிறு குழுக்களாகத் தம்மிடையே கதைத்து அபிலாஷை குறித்து தெளிந்து எழுச்சி பெற்றனர். இம்மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக சமூகத்தை எழுச்சிப்படுத்தினர். பல்கலை சமூகத்தின் பிரதிநிதிகளான மாணவர்கள், ஊர் ஊராய் மக்களின் வேலைத் தளங்களிற்கு, இருப்பிடங்களிற்குச் சென்று அவர்களுடன் கதைத்து நம்பிக்கையூட்டித் தங்களை வெளிப்படுத்தினர். விளைவாக மக்கள் தமது ஆசைகளை உணர்ந்து தெளிந்து வெளிப்படுத்தத் துணிந்தனர்.

## துணிந்த தமிழினம்

2001ஆம் ஆண்டு தை மாதம் 17இல் இவ்வாறு எழுச்சியுற்ற மக்கள் கூட்டம் தமது அபிலாஷைகளை பொங்குதமிழாக வெளிப்படுத்தத் துணிந்தார்கள். ஆனால், ஆசைகளைச் சொல்லக்கூட தமிழருக்கு இந்த 'ஜனநாயக' நாட்டில் இடமில்லை என ஆக்கிரமிப்பு இராணுவமும் பொலீஸாரும் மறுத்து எவரும் நினைத்துக் கூடப் பார்த்திராத அடக்குமுறையின் ஒரு பரிமாணத்தை நிரூபித்துக்காட்டினர். அதுமட்டுமல்ல ஜனநாயகம், மனித உரிமை என்று வேடமிட்டு உலகிற்கு காட்டிக்கொண்டிருந்த போலி முகத்தில் தம் இரு கைகளாலேயே அள்ளிச் சேறு பூசிக்கொண்டார்கள்.

துப்பாக்கிப் பிரயோக கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில் தேவையற்ற இழப்புகளையும் உயிர் ஆபத்துக்களையும் தவிர்க்கும் முகமாக மக்களை அந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டோம். அங்குல இடைவெளி இல்லாத ஆக்கிரமிப்பு இராணுவ வேலியின் நடுவில் நின்று மக்களிடையே சென்று ஊடாடி மனதை அறிந்து திரும்பிய பல்கலை சமூகம், தமிழர்களின் உள்மன விம்பங்களை பிரதிபலிப்பவர்களாக அபிலாஷைகளை வெளிப்படுத்த, அது தமிழர் வாழும் தேசமெல்லாம் பரந்து எழுந்து உலகின் செவிகளிளெல்லாம் அறைந்து மோதி சர்வதேசத்தின் கண்களை அகலத்திறந்தது. அந்நிகழ்வின் இராணுவ வேலியின் இடைவெளிகளினூடாகப் புகுந்து மதில் கடந்து எம்முடன் வந்து கைகோத்து இணைந்த பலநூற்றுக் கணக்கான மதகுருமார்களை, பாடசாலை மாணவர்களை, பொதுமக்களை இதய நெகிழ்வுடன் நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

## சமாதானச் சூழல்

இன்று நிலைமைகள் மாற்றம் பெற்று சமாதான முயற்சிகள் நடைபெறுகின்றன. முன்பு குறிப்பிட்டது போல் மக்கள் ஆசைப்படும் தீர்வு என்ன என்ற கேள்வி முனைப்புடன் முன்வைக்கப்படுகின்றது.

கடந்த பொங்குதமிழில் மக்கள் திரண்டு தமது ஆசைகளைச் சொல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்பொழுது அந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதுமட்டுமல்ல எமது அபிலாஷைகளை ஒரே குரலில் உணர்வுடன் வெளிப்படுத்தும்போது சர்வதேசத்திற்கும் சிங்கள மக்களிற்கும் எமது குரலிற்கு மதிப்பளிக்கும், தவிர்க்க இயலாமல் அது குறித்து ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும் நிலை தோன்றும். இது நிரந்தர சமாதானத்திற்கு வழி வகுக்கும். எனவே, பட்டிதொட்டியெல்லாம் வாழும் மக்கள் தமது ஆசையை எடுத்து உள்ளங்கையில் தாங்கியவாறு வாருங்கள். முன்னெப்போதும் திரளாத பெருங்கூட்டமாகத் திரண்டு-

சுயநிர்ணயம், மரபுவழித்தாயகம், தமிழ்த்தேசியம் ஆகியவையே எமது அபிலாஷை -

எமது தலைமைச் சக்தி தமிழீழ விடுதலைப் புலிகளே -

ஆக்கிரமிப்பின் சின்னமாக எமது தேசத்தில் இராணுவம் இருப்பதை அடியோடு வெறுக்கின்றோம்,

- என்று மேலெழுந்துவரும் எம் மனஉணர்வுகளை வெளிப்படுத்துவோம் கௌரவமான, நீதியான, சமாதானத்தை அடைவதற்கு வருடத்தில் ஒரு நாள்.

**இன்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் "பொங்குதமிழ்"**

***உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்***
***உலகத் தாய் வயிற்று மைந்தர்***
***நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்***
***நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.***

### சிங்கள மக்களுக்கு:...

**நாம் ஆசைப்படுவது எமது உரிமைகளை மட்டும்தான். உங்கள் ஓர் அங்குல நிலத்துக்கேனும் நாம் ஆசைப்படவில்லை. உங்கள் உரிமைகளைப் பாதிக்கும் வெறும் எண்ணக் கருத்துக்கள்கூட எம் மனங்களில் இல்லை. நாங்கள் உங்கள் எதிரிகள் அல்ல. ஏன்! ஓர் இராணுவ வீரனின் ஆத்மாவை சிதைப்பதுகூட எமது நோக்கமல்ல. ஆனால், ஆக்கிரமிப்பின் சின்னமாக எமது தேசத்தில் உங்கள் இராணுவம் கால் பதித்து நிற்பதை அடியோடு வெறுக்கின்றோம்.**

**- யாழ்.பல்கலைக்கழகச் சமூகம்.**

## நுணாவில் பகுதியில் அநாதரவாகக் கிடந்த தளபாடங்கள் மீட்பு!

நுணாவில் பகுதியில் அநாதரவாகக் கிடந்த வீட்டுக் கதவுகள், மேசைகள், பலகைகள் போன்றவை நுணாவில் கிழக்குப் பகுதி வைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதாகவும் - உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெறலாம் எனவும் - அப்பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பிகளால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## அறிவுறுத்தல் கூட்டம்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி, வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களைச சேர்ந்த இணைப்பதிகாரிகள், உதவி இணைப்பதிகாரிகள், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோர் [illegible] காமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இ[illegible]சயா கேட்டுள்ளார்.(ஒ-13-198)


உ

கல்வியங்காடு

**ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தான**

**வருடாந்த மஹோற்சவம்**

இன்று (17.04.2002) புதன்கிழமை கொடியேற்றம்
காலை 5.30 மணிக்கு அபிஷேகம், விசேட பூசை
காலை 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை
காலை 9.00 மணிக்கு துவஜாரோகணம்
25.04.2002 இரதோற்சவம் 26.04.2002 தீர்த்தோற்சவம்
மகோற்சவ பிரதம குரு: **சிவஸ்ரீ வர்தராஜக்குருக்கள்**

*தெய்வீக சொற்பொழிவு*

17.04.2002 முதல் 25.04.2002 வரை தினமும்
இரவு 7.00 மணி முதல் 8.00 மணிவரை "பெரிய புராணம்" தொடர் விரிவுரை
*நிகழ்த்துபவர்:* சைவப்புலவர் **ஏ.அனுசாந்தன்** B.A.(Hons)

*அனைவரும் வருக! எம்பெருமானின் அருள் பெறுக!*

- ஆலய பரிபாலன சபையினர்.

(2878)

*விளம்பர அன்பளிப்பு:*

**ராஜா பந்தல் சேவை**
சொக்கட்டான் பந்தல், முத்து மணவறை, சமையல் பாத்திரங்கள் யாவும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர்: **க.ஸ்ரீரங்கநாதன்,**
*விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

**தயா ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம், பலசரக்குப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள் அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர்: **வே.குமாரமூர்த்தி**
*G.P.S. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 - 11 - 1933

மறைவு 28 - 04 - 2001

**திருமதி தங்கம்மா மகேசன்**

திதி: 17.04.2002

அணையா விளக்காய் எங்கள் குடும்பத்திற்கு ஒளியூட்டிய அன்புத் தீபம் அணைந்து ஓராண்டு நிறைவில் நினைவு கூருகின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உடையார் வளவு,*
*சுன்னாகம்.*

(2814)


**குளு குளு எனவே குழந்தைகள் வளர கொடுத்திடுவீர் தாய்ப்பாலை**
**வளர்பிறைபோல குழந்தைகள் வளர கொடுத்திடுவீர் தாய்ப்பாலை**

(C/21416)

உ

குப்பிளான் வீரமனை கன்னிமார் என வழங்கும் கருணை மிகு ஸ்ரீ கௌரி அம்பாள் தேவஸ்தான

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

17.04.2002 புதன்கிழமை கொடியேற்றம் காலை 11.00 மணி
23.04.2002 செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழா மாலை 3.00மணி
24.04.2002 புதன்கிழமை சப்பறத் திருவிழா மாலை 4.30 மணி
25.04.2002 வியாழக்கிழமை தேர்த்திருவிழா காலை 10.15 மணி
26.04.2002 வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழா காலை 11.00 மணி
கொடி இறக்கம் மாலை 4.30 மணி
27.04.2002 சனிக்கிழமை பூங்காவனம் மாலை 4.30 மணி

மகோற்சவ பிரதமகுரு: **சிவஸ்ரீ சி.கிருஷ்ணசாமிக் குருக்கள்**
*(புன்னாலைக்கட்டுவன்)*

*வீரமனை,*
*குப்பிளான்.* (2909) - தேவஸ்தான பரிபாலன சபையினர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 17 - 07 - 1965

மறைவு 18 - 03 - 2002

**அமரர் குமார்சாமி ஜீவதாசன்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது இல்லத்தில் இன்று (17.04.2002) புதன்கிழமை நடைபெறுகின்ற வீட்டுக் கிருத்தியம், நண்பகல் மதியபோசனம் ஆகியவற்றில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பிடாரி கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.* (2895)

மனைவி, மகள்,
பெற்றோர், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# நாங்கள் உதவியளிப்போம்









நாட்டின் பிணக்கு நிலை காரணமாக நீங்கள் வீட்டை விட்டு வெளியேறியிருந்தால், புனர்வாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் அகதிகள் தொடர்பான அமைச்சு *(MRRR)*, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் *(UNHCR)* மற்றும் சர்வதேச அமைப்புக் களின் ஆதரவுடன் உங்களை மீளக்குடியமர்த்துவதற்கு அல்லது வேறு இடத்தில் குடியமர்த்துவதற்கு உதவிபுரிய விரும்புகிறது.

சுய விருப்பத்தின் பேரில், பாதுகாப்புடனும் கௌரவத்துடனும்.

இடம்பெயர்ந்தவர்களைப் பதிவுசெய்ய *MRRR, UNHCR* என்பன ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் உங்கள் பங்களிப்பு எங்களுக்குத் தேவை. உங்கள் பிரச்சினைகளையும் திட்டங்களையும் எங்களுக்குத் தெரிவியுங்கள். அவ்வாறு செய்யும்படி மற்றவர்களையும் ஊக்குவியுங்கள்.

இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும் உள்ள அதே உரிமைகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கும் உண்டு. அந்த உரிமைகளை முன்வந்து பெற்றுக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம் ஆகும்.

பதிவு செய்யப்படவேண்டியோர் யார்? ஆயுத மோதல்கள், பொதுவான வன்முறை நிலைமை அல்லது மனித உரிமை மீறல்கள் காரணமாக வீட்டை விட்டு வெளியேறும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி, தற்சமயம் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் வசிப்பவர்களே பதிவு செய்யப்பட வேண்டியவர்கள். 2000 டிசெம்பர் 31இற்குப் பின்னர் அரசாங்க உதவியுடன் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்ற முன்னாள் இடம்பெயர்ந்தோரும் பதிவு செய்து கொள்ளும் தகுதி உடையவர்களாவர்.

உங்கள் பிரதேசத்தில், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் பதிவு நாடு பூராகவும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகிறது. மேலதிக விவரங்களுக்கு உங்கள் கிராம சேவகரிடம் அல்லது *UNHCR* இல் விசாரியுங்கள் அல்லது 01–382065 என்ற இலக்கத்தில் *MRRR* உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(C/21737)

MRRR

UNHCR
The UN Refugee Agency

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறை குறைந்த கணனி

கணனிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம் என்று கூறுமளவுக்கு கணனிகளின் வடிவங்கள் புதிதுபுதிதாக உருவாகி வருகின்றன.

கணனி அவதாரத்தின் புதிய வடிவம்தான் 'BYI' இதன் பெயர் (Latas note RI) என்பதாகும். 700 மெகாஹேட்ஸ் பென்டியம் 3 புரொஸெசர் மூலம் இயங்கக்கூடியது. இதன் மொனிட்டரின் (திரை) அகலம் 10.4 அங்குலங்கள் மட்டுமே. இதன் மொத்த நிறை 960 கிராம்.

சாதாரணமாக 40 ஒற்றைக் கொப்பியின் அளவில் (B5 - Note Book) இந்தக் கணனி இருக்கும். இலத்திரனியல் பொருள்கள் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் ஜப்பானிய நிறுவனமான 'மிட்சுஜி' இதனைத் தயாரித்துள்ளது. இதன் விலை சுமார் ஒரு லட்சம் ரூபா வரையில் இருக்கிறது.



தயாரிப்பு:
கனிமொழி

# காற்றுக்கு என்ன விலை

மனதுக்கு இனிய நறுமணம் கலந்த காற்றைச் சுவாசிப்பதன் மூலம் உடலுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கிறது; மூளையின் செயல்திறன் அதிகரிக்கிறது; சோர்வு குறைகிறது; மன இறுக்கம் குறைந்து மனதுக்குள் மகிழ்ச்சி பிறக்கிறது என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.



இதனை அடுத்து நறுமணம் கலந்த காற்றைச் சுவாசிப்பதற்கான கடைகளை ஜப்பானில் திறந்துள்ளார்கள். இவற்றுக்கு ஒக்ஸி பார் (Oxy Bar) என்று பெயர். இந்தக் கடைகளுக்குச் சென்று நாம் விரும்பும் நறுமணம் கலந்த காற்றைக் கட்டணம் கொடுத்து சுவாசித்துவிட்டு வரலாம்.

இத்தகைய ஒக்ஸி - பார்களுக்கு ஜப்பானிய இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. நறுமணக் காற்றைச் சுவாசிப்பதன் மூலம் சுறுசுறுப்பாகப் படிக்க முடிகிறது; விளையாட்டுக்களிலும் ஈடுபடமுடிகின்றது என்கிறார்கள் அவர்கள்.

# அழகிகள் நடனம்



அழகு! இன்றைய உலகில் காசு இல்லாத ஒரே மூலதனம் இதுதான். இலங்கை உட்பட அனைத்து நாடுகளிலும் தற்போது அழகிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல உலக அழகுராணிப் போட்டிகள், பிரபஞ்ச அழகிப் போட்டி என பெருமெடுப்பிலான அழகுப் போட்டிகள் நடக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் அழகின் வரைவிலக்கணம் வேறுபடுகின்றது. உலகில் 'ஜிப்சி' இனத்தவர்கள் வித்தியாசமான அழகைக் கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கான அழகிப் போட்டிகள் அண்மையில் ருமேனியா நாட்டில் இடம் பெற்றது. இதில் முதலிடம் பெற அழகிகள் அழகாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. 'பெல்லி' நடனம் எனப்படும் இடுப்பை வளைத்து ஆடும் நடனமும் ஆடத் தெரிந்திருக்கவேண்டும்.

இந்தவகை நடனம் அந்த நாட்டில் மிகப் பிரபலம். இங்கே அழகிகள் பெல்லி நடனம் ஆடுவதைக் காணலாம்.

# அட! அப்படியா!!

# வெண்மை தினம்

ஜப்பானில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 14ஆம் திகதியை வெண்மைத் தினமாக(White day) என்று கொண்டாடுகின்றார்கள்.

பெப்ரவரி 14ஆம் திகதி உலகம் முழுவதும் காதலர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் ஜப்பானியப் பெண்கள்தான் தங்கள் காதலர்களுக்குப் பரிசு வழங்குவது வழக்கம்.

இதற்குப் பழிவாங்குவதற்காகவே அதாவது காதலன்களை செலவு செய்ய வைப்பதற்காகவே மார்ச் மாதத்தில் இந்த வெண்மைத் தினம் கொண்டாடப் படுகின்றது. இதற்காக - காதலன்களை எரிச்சல்படுத்தும் வகையில் - நிறையப் பரிசுப் பொருள்களை ஜப்பானிய நிறுவனங்கள் விற்பனைக்கு விடுகின்றன.

இங்கே படத்தில் பார்ப்பதும் அத்தகைய வெண்மைத் தினப் பரிசுகளில் ஒன்றுதான். ஜப்பானியப் பெண்களிடம் இதற்கு ஏகப்பட்ட வரவேற்பு. பார்ப்பதற்கு இவை பொலித்தீனில் அடைக்கப்பட்ட ரோஜாப்பூக்கள் போன்று தெரிந்தாலும் விடயம் கொஞ்சம் விவகாரமானது. உண்மையில் அவை பெண்களுக்கான உள்ளாடைகளே.

# பச்சை குத்தினால் மதிப்பு

இன்று மேற்கு நாடுகளில் பச்சை குத்திக் கொள்வது ஒருவித நாகரிகம். அதுவும் உடல் முழுவதும் பச்சை குத்திக்கொள்வதில் அவர்களுக்கு அலாதிப்பிரியம்.

ஜப்பானிலும் பச்சை குத்திக் கொள்ளும் மோகம் பரவ ஆரம்பித்திருக்கிறது. அங்கு உடல் முழுவதும் பச்சை குத்திக்கொண்டவர்களைக் கண்டால் மற்றவர்கள் மிகவும் மதிப்புடன் பார்க்கின்றனராம்.

இந்தப் பச்சை குத்தும் வழக்கம் 4ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளது. எகிப்தியர்கள் தங்கள் கடவுளான நெய்த்தின் உருவத்தைப் பச்சை குத்திக் கொண்டார்கள். தாங்கள் அவரின் குழந்தைகள் என்பதைக் குறிப்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

பண்டைய கிரேக்கர்கள், செல்வந்தர்கள் மட்டுமே பச்சை குத்திக் கொள்ளவேண்டும் என்று தீர்மானமே போட்டார்கள்.

கிரேக்கர்கள் தமது இரகசியச் செய்திகளை அடிமைகளின் தலையை மொட்டையடித்து அதில் பச்சை குத்தி அனுப்பினார்கள். மொட்டைத் தலையிலுள்ள படங்களைப் பார்த்து அரச நபர்கள் இரகசியச் செய்தியைப் புரிந்துகொண்டார்கள்.







# மனிதனுக்கு மூளை கணனி

அமெரிக்காவின் பென்ரகன் அலுவலகத்தில் ஏதோ ஓர் அறையில் வைக்கப்பட்டுள்ள கணனி இலங்கையில் உள்ள இரத்தமும் சதையுமான சி.ஐ.ஏ. உளவாளி ஒருவரைத் தனது கட்டளைகள் மூலம் இயங்கச் செய்யும்.

இந்த மனித உளவாளியின் கண், காது, மூக்குப் போன்ற ஐம்புலன்களின் வழியாகவும் கிடைக்கும் தகவல்களை பகுத்து ஆராயும் அமெரிக்காவில் உள்ள கணனி, அதற்கேற்ப அந்த உளவாளியை வழிநடத்தும்; அவனுக்கு கட்டளைகளை வழங்கும்; அவனை தன் இஷ்டத்துக்குச் செயற்பட வைக்கும்.

வெளிப்பார்வைக்கு மிகச் சாதாரணமாகத் தெரியும் அந்த மனித உளவாளியின் உடலும் உயிரும் இங்கே இருந்தாலும் அவனது மூளை மட்டும் பல ஆயிரம் மைல்களைத் தாண்டி அமெரிக்காவில் சுதந்திரமாக இயங்கிக்கொண்டிருக்கும்.

அந்த மூளை எது என்கிறீகளா? அதுதான் பென்ரகனின் ஏதோ ஓர் அறையில் இருக்கிறதே அந்தக் கணனி.

என்ன இது விசித்திரமாக அம்புலி மாமாவில் வரும் மந்திரவாதி தனது சக்தியால் மனிதனை ஆட்டுவித்தான் என்பது மாதிரியான கதையாக இருக்கிறதே என்று எண்ணத்தோன்றுகின்றதா?

அப்படியெல்லாம் அவசரப்பட்டு எண்ணி விடாதீர்கள். இன்னும் சில ஆண்டுகளில் இது எல்லாம் உலகில் சர்வசாதாரணம் ஆகிவிடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கான சாத்தியக்கூறுகளையும் அவர்கள் நிரூபித்து வருகிறார்கள்.

மேற்குலகின் விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத் துறைகளின் அபார, அசுரவளர்ச்சிக்கு இது மற்றுமோர் உதாரணம்.

ஒருவரின் செயலை இன்னொருவர் கட்டுப்படுத்தமுடியுமா? இந்தக் கேள்விக்கான விடைதான் நீங்கள் மேலே கண்ட சி.ஐ.ஏ. உளவாளியின் கற்பனைக் கதை. ஆனால், கணனியை வைத்துக்கொண்டு ஒருவரை



கையில் பொருத்தப்பட்ட சிப் இதுதான்.

முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அதாவது இரத்தமும் சதையுமான மனிதனைக் கணனி கட்டுப்படுத்தும். தன் இஷ்டத்துக்கு கட்டளைகளை அனுப்பி அதன்படி மனிதனைச் செயற்பட வைக்கும். தான் விரும்பியதைச் செய்யச் செல்லும். மனிதனும் அவ்வாறே செய்வான். அவன் செயலில் மனிதனாகவும் மூளையில் கணனியாகவும் இருப்பான்.

கமல் ஸ்டைலில் சொன்னால் 'மனிதன் பாதி கணனி பாதி கலந்து செய்த கலவை நான்.'

இத்தகைய மனிதனைக் கட்டுப்படுத்தும் கணனி அறிவியலை சைபோர்க் (Cyborg) என்று அழைக்கின்றார்கள்.

அறிவியல் துறையில் இரண்டு முக்கிய துறைகள் இன்று முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. ஒன்று பயோனிக்ஸ் (Bionics) மற்றொன்று சைபர் நெடிக்ஸ் (Cyber netics)

பயோனிக்ஸ் என்பது உயிரியல் பண்புகளையும் (Biological) மின்னணுப் பண்புகளையும் (Micro electronic) இணைத்துச் செயற்படுகின்ற ஒரு துறையாகும்.

சைபர்நெடிக்ஸ் என்பது தகவல் தொடர்பு மற்றும் கட்டுப்படுத்துதல் (Communication and Control) போன்ற துறைகளுடன் தொடர்புடைய துறை.

நமது உடல் உறுப்புக்களில் மூளைக்கும் வெளி உலகத்துக்கும் இடையிலான முக்கிய தகவல் தொடர்பு சாதனங்களாகப் பயன்படுவது கண், காது, மூக்குப் போன்ற உறுப்புகளாகும். இந்த உறுப்புகளின் செயல்திறனை - தகவல் தொடர்பு வேலைத் திறனை - அதிகரிப்பதற்கு மின்னணுக் கருவிகளைப் பயன்படுத்தலாமா என்ற ஆராய்ச்சிக்கு பயோனிக்ஸ் துறை முக்கியத்துவம் அளிக்கின்றது.

இந்தக் கண், காது, மூக்குப் போன்ற உறுப்புக்கள் பாதிக்கப்பட்டாலும் அவற்றின் வேலைகளை மின்னணுக்கருவிகளைக் கொண்டு செய்யலாமா என்பது குறித்து தற்போது ஆராய்ச்சி நடைபெறுகின்றது.

பார்வை இல்லாதவர்கள் அல்லது காது கேளாதவர்கள் இத்தகைய மின்னணுக் கருவிகளைப் பொருத்திக் கொண்டால் ஏனையவர்கள் இந்த உறுப்புக்களால் பெறும் முழுப் பயனைப் போன்று பயன்பெற முடியுமா? ஆம்; அது சாத்தியம்தான் என்று நிரூபித்து வருகின்றது இன்றைய அறிவியல்.

இத்தகைய ஆச்சரியகரமான ஆராய்ச்சி ஒன்றைக் கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் நிகழ்த்தினார். அவரது பெயர் கெவின் வோர்விக் (Kevin Warwick). பிரிட்டிஷ் ரெடிங் பல்கலைக் கழகத்தில் இவர் சைபர் நெடிக் பேராசிரியராக இருக்கின்றார்.

இவர் தனது கையில் 3 மில்லி மீற்றர் சுற்றளவு கொண்ட மைக்ரோ சிப் ஒன்றை சத்திர சிகிச்சை மூலம் உள்ளே வைத்துள்ளார்.

உள்ளே இருக்கும் இந்த மைக்ரோ சிப் அவரது மூளையில் இருந்து கைகளுக்கு வருகின்ற கட்டளைகளைத் தானும் பெற்றுக் கொண்டு வெளியில் தன்னுடன் தொடர்புபட்டுள்ள கணனிக்கும் அவற்றை அனுப்பி வைக்கின்றது.

மூளை நமது உறுப்புகளுக்கு மின்னலை வடிவத்திலேயே கட்டளைகளை அனுப்பி வைக்கின்றது.

கெவின் வோர்விக்கின் கையின் உள்ளே இருக்கும் மைக்ரோ சிப் இந்த மின்னலைகளைத் தானும் பெற்று அவற்றை வெளியில் உள்ள கணனிக்கும் அனுப்புகின்றது.

அதாவது மூளையிலிருந்து மின்னலைகளாக வரும் கட்டளைகளைப் பெறும் உள்ளே இருக்கும் சிப், அதனை முதலில் வெளியில் இருக்கும் ரேடியோ அன்ரனாவுக்கு அனுப்பும், பின்னர் ரேடியோ அன்ரனா அதனைக் கணனிக்கு அனுப்பிவைக்கும்.

அந்த மின்னலைக் கட்டளைகள் கிடைத்ததும் கணனி அவற்றை ஆய்வு செய்கின்றது. மூளை அனுப்பும் எத்தகைய கட்டளைகளுக்கும் கைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்கின்றது.

அதிலிருந்து எத்தகைய செயலைச் செய்ய என்ன கட்டளையை அனுப்பவேண்டும் என்பதைக் கணனி தெரிந்துகொள்கின்றது. பின்னர்





கணனியே குறிப்பிட்ட வேலைகளுக்குரிய கட்டளைகளைத் தானே மைக்ரோ சிப்புக்கு அனுப்பி வைக்கின்றது. கையும் அந்தக் கட்டளையைப் பெற்றுக் கொண்டு, மூளைக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவது போன்று செயற்படுகின்றது.

பிரேம்

இதுபோன்ற மைக்ரோ சிப்பை கைகளில் புதைத்துச் செய்கிற ஆராய்ச்சியை கெவின் 1998ஆம் ஆண்டு தொடங்கினார். அப்போதும் அவர் தனது கையில் மைக்ரோசிப் ஒன்றைப் புதைத்துக்கொண்டார். அது அவரது கையில் உருவாகும் மின்னலைகளைத் தொடர்ந்து வெளியே உள்ள கணனிக்கு அனுப்பி வந்தது. இதனால் அவர் எங்கு சென்றாலும் அதனை அந்தக் கணனியால் கண்டுகொள்ள முடிந்தது.

இப்போது அவர் செய்து கொண்டுள்ளது இரண்டாவது மைக்ரோ சிப் சத்திரசிகிச்சையாகும்.

இவரது இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் என்ன? அதனை அடுத்தமுறை பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

வடமராட்சி,ஏப்.17

நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளை வியாழக் கிழமை முதல் எதிர்வரும் 22ஆம் திகதிவரை கரவெட்டி அரசினர் கால் நடை வைத்திய அதிகாரி பணிமனை யின் அனுசரணையுடன் வளர்ப்பு நாய் களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை காலை 7 மணிமுதல் 11 மணிவரை கட்டைவேலி சனசமூக நிலையத்திலும்,

பிற்பகல் ஒரு மணிமுதல் 3மணி வரை கரவெட்டி மத்தி ஐங்கரன் சன சமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப் படும்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் 11 மணிவரை கரவெட்டி மேற்கு இராஜகிராமம் சனசமூக நிலையத்திலும்,

முற்பகல் 11மணிமுதல் ஒரு மணிவரை கரவெட்டி கிழக்கு கலட்டி சனசமூக நிலையத்திலும்,

பிற்பகல் ஒரு மணிமுதல் 3மணி வரை நெல்லியடி முருகமூர்த்தி சன சமூக நிலையத்திலும் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் 22ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11மணிவரை நெல்லியடி சனசமூக நிலையத்திலும்,

முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணி வரை கரவெட்டி பிரதேச சபை நெல்லியடி உபஅலுவலகத்திலும்,

பிற்பகல் 1மணி முதல் 3 மணி வரை வதிரி காதிர்காம கோயிலடி சனசமூக நிலையத்திலும் வைத்துத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்.

மேற்படி பகுதிகளில் உள்ளோர் தமது வளர்ப்பு நாய்களுக்கு தவ றாது தடுப்புமருந்தை ஏற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-173)

# தமிழ் உணர்வுமிக்க 'பொங்குதமிழில்' பெரும் திரளாகப் பங்கேற்போம்

## விநாயகமூர்த்தி எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

தமிழ் இன உணர்வுமிக்க பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள் ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதியன்று, எத்தனையோ கெடுபிடிகள், வன்முறைகள், கடுமை யான எதிர்ப்புக்கள், ஆயுத அச்சுறுத் தல்கள் என்பவற்றிற்கும் மத்தியில் யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தால் ஒழுங்குசெய்யப்பட்டு 'தன்மானம் உள்ள தமிழன் இனியும். தலை சாய்க்க மாட்டான்' என்பதை தமிழர் தாயகம், தமிழர்தம் சுயநிர்ணய உரிமை மற்றும் அபிலாஷைகளை வலியுறுத்தி எழுச்சிபூர்வமாக, எண் ணிப்பார்க்க இயலாதவகையில், பல் கலைக்கழகம் தவிர்ந்த வெளி ஆள் கள் செல்வதைத் தடுத்துநிறுத்திய போதும் நடத்தப்பட்ட நிகழ்வே 'பொங்குதமிழ்' ஆகும். இப்படிப்பட்ட இந்தப் பொங்குதமிழ் நிகழ்வானது ஒட்டுமொத்தமான இலங்கைத் தமி ழர்களின் வரலாற்றில் ஒரு மைல்கல, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய ஒரு விடயம் என்றால் அது மிகையாகாது.

பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் - நிகழ்விற்கான அனுமதி மறுக்கப் பட்ட நிலையிலும் - பல்கலைக்கழ கத்தைச் சூழ சுற்றிவளைப்பு நடந்த போதும் - யாழ்.பல்கலைக்கழக மாண வர்கள் முதன்முதலில் இப்படியான ஓர் எழுச்சியை "பொங்குதமிழ்" என்ற சாத்வீகப் போராட்டமாக நடத்தியது என்றும் மறக்கமுடியாததும், அதே வேளை நினைத்துப் பெருமைப்பட வேண்டியதுமாகும்.

பொங்குதமிழ் பொங்கியது, அதன் எழுச்சியிலே சீற்றம் கொண்டவர் களின் வெளிப்பாடே யாழ்.பல்கலைக் கழக மாணவனும் மாணவர் ஒன்றியத் தின் செயலாளரும் ஆகிய திவ்விய னின் கைது, அதேவேளை இந்த ஆண்டு இப்போது நடைபெறும் பொங்குதமிழானது முதன்முதலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட பொங்குதமிழ் எழுச்சியை அடுத்து மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, நுவரெலியா, திருகோண மலை போன்ற இடங்களிலும் மிகவும் எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கு எல் லாம் ஒரு சிகரம் வைத்தாற்போல அமைகிறது.

இன்று உலகனைத்தும் வாழும் தமிழர்களிடையே தமிழ் உணர்வை எழ வைத்தது இந்தப் பொங்குதமிழ் தான் என்பதை யாரும் மறுக்கமுடி யாது.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமி ழர்களின் பிரதிநிதிகள் என்பதையும், வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள் அனைவரும் வேண்டுவது சமாதானமே என்பதை உறுதிப்படுத்தியும், வலியுறுத் தியும் நடைபெறும் இந்நிகழ்வில் ஒட்டு மொத்தமாக யாழ். தமிழ்ச் சமூகமே கலந்துகொள்ளவேண்டும் என வேண்டு கோள் விடுப்பதுடன், பொங்கு தமிழ் பொங்கியெழ எனது ஆசிகளையும் நல்குகிறேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ)

# தமிழகப் பிரமுகர் ரவி தமிழ்வாணன் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்



யாழ்ப்பாணம்,ஏப்.17

மறைந்த பிரபல எழுத்தாளர் 'கல்கண்டு' தமிழ்வாணனின் மகனும், மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், 'ஹட்சன் அக்ரோ' நிறுவன இயக்குநருமான ரவி தமிழ் வாணன் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

நாளை காலை விமானம்மூலம் இங்குவரும் அவர், பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் புத்தக விற்பனைக் கண் காட்சியில் பங்கேற்பார். மாலை 5 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் பாரதிபாலன் எழுதிய 'உலகக் காவியங்கள் - பாகம் I' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்கிறார்.

நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் புத்தக விற்ப னைக் கண்காட்சியை தொடக்கி வைக்கும் ரவி தமிழ்வாணன் அதே தினத்தில் யாழ்.பல்கலைக்கழக நூல கம், யாழ்.பொது நூலகம் ஆகியவற் றுக்கு மணிமேகலைப் பிரசுரப் புத்த கங்களை வழங்கவுள்ளார்.

இங்கு மேலும் சில நிகழ்வுகளில் பங்கேற்க உள்ள ரவி தமிழ்வாணன் எதிர்வரும் சனிக்கிழமை காலை விமா னம்மூலம் கொழும்பு திரும்புகிறார்.

கடந்த 13ஆம் திகதி கொழும்பு வந்த ரவி தமிழ்வாணன் கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்கு சென்றிருந்தார். எதிர்வரும் 29ஆம் திகதி தமிழகம் திரும்புவதற்கு முன் பாக அவர் வவுனியா, மட்டக்களப்பு உட்பட பல இடங்களுக்கும் செல்ல வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# பருத்தித்துறை – மருதங்கேணி வீதியை திறக்கும்படி கோரித் தீர்மானம்

## பிரதேச சபை நிறைவேற்றியது

வடமராட்சி,ஏப்.17

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியைத் திறந்து வடமராட்சி கிழக் குப் பகுதி மக்கள் மீளக்குடியேற வசதி செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத் தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது.

சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ் வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இத்தீர்மானத்துக்கான பிரேரணையைச் சபைத் தலைவர் கொண்டுவந்தார். பிரேரணையை ஈ.பி. ஆர்.எல்.எவ். உறுப்பினர் கே.சிவச் செல்வம் வழிமொழிந்தார்.

வடமராட்சி கிழக்கில் வெடித்த யுத்தத்தினால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு, தெற்கு மேற்குப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். அத்துடன் அப்பகு திக்கான பருத்தித்துறை, மருதங் கேணி வீதி - 12ஆவது மைலில் நாகர்கோவிலுடன் மூடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் இவ்வேளையில், பருத் தித்துறை - மருதங்கேணி வீதியை மக்கள் போக்குவரத்துக்காக அனு மதித்து வடமராட்சி கிழக்கு மக்கள் தத்தமது சொந்த இருப்பிடங்களில் குடியேற உரிய நடவடிக்கைகளை தாமதமின்றித் மேற்கொள்ளவேண்டும் எனவும் -

புரிந்துணர்வு உடன்படிக்கை சீரிய முறையில் அமுலாகி நாட்டில் சமா தானம் ஏற்படவேண்டும் எனவும் -

அத்தீர்மானத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், பாதுகாப்பு அமைச் சர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதி, அரச அதிபர் ஆகி யோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள் ளன.

(ஒ-173)

# தன்னலம் கருதாது பிறர்நலம் கருதியவர் எழுத்துலக மேதை 'பாரதிநேசன் சின்னத்தம்பி'

**மூத்த பத்திரிகையாளரும், சமதர்மவாதியுமான வீரகத்தி சின்னத்தம்பியின் முதலாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

கரவெட்டி, கட்டைவேலி கிராமத் தில் வசித்துவந்த வீரகத்தி - பத்தி னிப்பிள்ளை தம்பதியினர்க்கு மூத்த மகனாக 25-05-1939இல் இவர் பிறந் தார். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்னும் மூத்தோர் வார்த் தைக்கு அமைய, குழந்தையாக இருக்கும்போதே இவர் துடிப்புமிக்க வராகக் காணப்பட்டார். பள்ளிப் பரு வம் எய்தியபோது ஆரம்பக் கல்வியை கரவை மாணிக்கவாசகர் வித்தியால யத்தில் தொடர்ந்தார்.

ஆரம்பக்கல்வியை நிறைவுசெய்து கொண்டு உயர்கல்வியை இருதயக் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி போன்ற கல்லூரி களிலே கற்றுத் தேறினார். பட்டப் படிப்பை மேற்கொள்ளவேண்டிய நிலை யிலே தம்பி, இலங்கை மின்சாரசபை யிலே லிகிதர் வேலைக்குத் தெரிவா னார். இதனால் படிப்பைத் தொடராது வேலையில் இணைந்தார்.

ஒரு சிறந்த அன்பாளன், பண் பாளன், அறிஞரான தம்பி அரசியல், இலக்கியம், பொருளாதாரம், வரலாறு, கலை போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். யாருடனும் பழகுவதற்கு மிகவும் இனியவராய், எளிமையானவராய்த் திகழ்ந்தார். பார தியாரின் கொள்கைகள், இலட்சியங் களில் கொண்ட பற்றுக் காரணமாய், தனக்கு பாரதிநேசன் என்ற சிறப்புப் பெயரையும் சூட்டிக்கொண்டார். ஆரம் பத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளராக இருந்த அவர், கம் யூனிஸ்ட் கொள்கைகளின்பால் ஈர்க் கப்பட்டு 'கம்யூனிஸ்ட்'ஆகி, இலட்சிய வாழ்வில் தன்கோட்பாட்டில் இருந்து சற்றும் பிசகாது இறுதிவரை சொல் லும், செயலும், இலட்சியமுமாய் மாறா மாக்ஸியமாக வாழ்ந்து முடித்த உண்மையான மாக்சிஸவாதியாவார்.

தான் பற்றிய அரசியல் கோட் பாடுகளுக்கு அமைய உண்மையான சமதர்மவாதியாக உறுதியான நிலைப் பாட்டுடன் கம்யூனிஸ்டாக இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டியவர் தம்பி அவர்களாவர். இன்று கொள்கை ஒன்று, செயல் ஒன்றாக எத்தனையோ புத்திஜீவிகள் தடம்மாறிப் போய்விட்ட தைப் பார்க்கின்றோம். ஆனால் இவர் களைப்போல் தம்பி ஒருபோதுமே மாசடையவில்லை. இளமைப் பருவத் தில் முற்போக்கான கருத்துக்களால் கவரப்பட்ட தம்பி, தன்னையொரு பூரண கம்யூனிஸ்டாக்கி அக்கட்சி யின் கொள்கைக்கும், செயலுக்கும் வேறுபாடின்றி பலவிதமான நெருக் கடிகளுக்கு மத்தியிலும் தமது முற் போக்கு இயக்க வாழ்க்கையை வாழ்ந்துகாட்டியவராவார்.

சர்வதேச ரீதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிரிவினையின போது சண்முகதாசன் தலைமையில ஊற்றெடுத்த மாவோவாத கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பத்தொன்பது(19) வயதி லிருந்து எட்டு (8) வருடங்கள் வரை இலங்கை மின்சார சபையில் லிகித ராய்ப் பணியாற்றிய தம்பி அவர்கள், சீனாவில் ஏற்பட்ட மகத்தான பாட் டாளி வர்க்கக் கலாசாரப் புரட்சியின் போது பீக்கிங் வானொலியின் தமிழ் சேவையில் பணிபுரியக் கிடைத்த சந் தர்ப்பத்துக்காக இலங்கை மின்சார சபை லிகிதர் சேவையைத் துறந்து சீனா சென்றார். பீக்கிங்கில் அயல் மொழிப் பதிப்பகத்தில் வேலை செய்த கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் மாஸ்ட ரின் மூத்த புதல்வியான ராணிரத் தினதேவியைத் திருமணம் செய்து கொண்ட தம்பி சீனாவிலே தொடர்ந்து கஷ்டப்படாமல் வாழ்ந்திருக்கமுடியும்.

ஆனால் மாவோசேதுங்கின் மறைவை அடுத்து 1976இற்குப் பின்னர் சீனா வில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் அரசியல் மாற்றங்கள் காரணமாய் அங்கு தொடர்ந்து பணிபுரிய தம்பி அவர்கள் விரும்பாது குடும்பத்தாருடன் தாய் நாடு திரும்பினார். சீனா செல்வதற்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகளில் தொழிற் சங்கவாதி யாக, இளைஞர் அணியின் தீவிர உறுப்பினராக, பத்திரிகையாளராக, விமர்சனக் கட்டுரையாளராகப் பல பங்களிப்புக்களைச் செய்த அவர் நாடு திரும்பியதும் கூடுதலான காலத்தை



எழுத்துத்துறைக்கே அர்ப்பணித்தார். இவர் தனது பங்களிப்பு செவ்வனவாக அமையவேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாகவிருந்தார். இவர் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த காலகட்டத்தில் யாழ்.மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பட்ட வேதனைகளையும், சோதனை களையும் வெளியுலகிற்கு எடுத்து இயம்புவதற்காக தனது எழுத்தாற்றலை முழுமையாகப் பயன்படுத்தினார்.

தனது உடல் நலனில் அக்கறை கொண்டிருப்பரேயானால் இன்னும் எம்மத்தியில் எழுதிக்கொண்டேயிருக்க முடியும். பிறர் நலன் கொண்டு தன் உடல் நலன் கவனியாது எழுத் துலகில் நேரத்தைச் செலவிட்டதால் தமது அறுபத்திரண்டு வயதில்(62) எம்மிடமிருந்து மறைந்துவிட்டார்.

**கி.மகான்**
**வட்டுக்கோட்டை**

தம்பி மறைந்துவிட்டாரா? இல்லை என்றே சொல்லவேண்டும். தமது இரு கண்களையும் தானம் செய்தமையால் பார்வையற்ற இருவர் ஒளியைப் பெற்று சந்தோஷமாயிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல தன் உடலை யாழ்.பல் கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஒப்படைக்குமாறு இயம்பியதற்கு அமைய அவர் விருப்பப்படி அவரது உடல் மருத்துவபீடத்துக்கு ஒப்படைக் கப்பட்டு பொதுஉடைமை யாக்கப் பட்டுவிட்டது. இதனால் தம்பி அவர் கள் மறைந்தும் மறையாததுபோல் மக்கள் உள்ளங்களில், மாணவர் உள்ளங்களில், பத்திரிகையாளர் உள்ளங்களில், பாட்டாளிகளின் உள் ளங்களில் குறிப்பாக எல்லா மக்களின் உள்ளங்களிலும் வாழ்ந்துகொண்டே யிருக்கின்றார். ★

# இராணுவ முகாம் வாயிலில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

## தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

சாவகச்சேரி, மடத்தடி மேற்கில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் முகாமிட்டுள்ள படையினரை அங்கி ருந்து வெளியேறுமாறு கோரி அப் பகுதி மக்கள் இராணுவ முகாம் நுழைவாயிலில் நேற்றுமுன்தினம் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றவேளையில் மடத்தடிப் பகுதி மக்கள் அப்பகுதி யில் குடியமரப் படையினர் தடையாக இருந்து வருவதாகவும் -

இது தொடர்பாக இராணுவ அதி காரிகளுடன் மக்கள் பலதடைவை கள் தொடர்புகொண்டபோதிலும் எது வித பலனும் கிடைக்கவில்லை என் றும் - கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்தே அப்பகுதி மக்கள் ஆர்ப் பாட்டம் நடத்தியுள்ளனர்.

சுமார் நூற்றிஐம்பதுக்கும் மேற் பட்ட மக்கள் குறிப்பிட்ட முகாமின் வாயிலில் ஒன்றுதிரண்டதையடுத்து இராணுவ முகாம் வாயிற்புறம் முட் கம்பியினால் இழுத்து மூடப்பட்டது.

படையினரின் முகாம் முன்பாக 'எங்களுடைய வீடுகளை எங்களிடம் தா', 'எப்போது மறையும் எங்கள் அகதி வாழ்க்கை' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியபடி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்து கொண்டு 522ஆவது படையணி கட் டளைத் தளபதிக்கு முகவரியிட்ட மகஜரை மடத்தடி முகாம் தளபதி யிடம் கையளித்தார்.

(ஒ-5-31)

# பிரபாவைக் கைதுசெய்யக் கோரி புதுவை சட்டசபையில் தீர்மானம்

சென்னை,ஏப்.17

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத் தலைவர் வே.பிரபாகரன் கைது செய்யப்படவேண்டும் என்று பாண்டிச் சேரி சட்டசபை நேற்றுமுன்தினம் தீர் மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானத்தில் இலஙகை அரசு பிரபாகரனை கைதுசெய்து இந் திய அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கமோ அல்லது வேறு எந்த விடு தலைப் புலிகள் இயக்க உறுப்பினரோ இந்தியாவிற்குள் அனுமதிக்கப்படக் கூடாது என்றும் -

குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழ கமும் பாரதீய ஜனதாக் கட்சியும் வாக்களித்தன. திராவிட முன்னேற்றக் கழகம் நடுநிலை வகித்தது.(ஒ-12)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# களுத்துறை கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு,ஏப்.17

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் ஆரம்பித்திருக்கும் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்தது.

பல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்திருக்கிறது என்றும் சிலர் மூச்சுத் திணறல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

150 இற்கு மேற்பட்ட கைதிகள் இப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களில் 14பேர் சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறி அமர்ந்துள்ளனர்.

நீதி அமைச்சர் அல்லது சட்டமா அதிபர் நேரில்வந்து தமது விடுதலை குறித்து உறுதிமொழி வழங்கினால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என்று இக்கைதிகள் கூறியிருக்கின்றனர்.(ஒ)

# கதிர்காமத்தில் இருந்து வடக்கே தர்மயாத்திரை

கொழும்பு,ஏப்.17

கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான 'ஐக்கிய தர்ம யாத்திரை' எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகும். யாழ்.நாக விகாரையில் பிரதிஷ்டை செய்யப்படும் கலசம் கதிர்காமத்திலிருந்து இந்த யாத்திரையில் பவனியாக எடுத்துச் செல்லப்படும்.

மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்கர்கள் தலைமையில் மகா சங்கத்தினர் இந்த யாத்திரையில் பங்குபற்றுவர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் யாத்திரை ஆரம்பமாகும் என்று அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

கலச பிரதிஷ்டை நடைபெறும் தினத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலில் விசேட பூசைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (ம)


**பெற்றுக் கொள்ளவும்**

எனது அன்பு மகளின் பூப்புப்புனித நீராட்டு விழா 11.04.2002 வியாழக்கிழமை நடைபெற்ற வேளை சமுகந்தந்திருந்தவர் ஒருவரது தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
கதிர்வேலவன் அரிசியாலை,
உரிமையாளர்:S.கனகரத்தினம்
கைதடி கிழக்கு, கைதடி.
(2940)


## கடத்தப்பட இருந்த நெடுந்தீவு ஆடுகள் மீட்கப்பட்டன!

நெடுந்தீவில் இருந்து அனுமதியின்றி கற்கடதீவு ஊடாக மன்னாருக்குக் கொண்டுசெல்வதற்காகப் படகில் ஏற்றப்பட்டிருந்த இருபத்தைந்து ஆடுகள் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இவை மன்னாருக்குக் கொண்டுசெலலப்பட இருந்த சமயம் கிராம அலுவலர் ப.கதிரேசன், உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிரதம லிகிதர் தி.கிரிதரன் ஆகியோருக்கு கிடைத்த தகவலைத தொடர்ந்து சம்பந்தப்பட்ட பகுதிக்குச் சென்ற இருவரும் படகில் இருந்து ஆடுகளை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-111)


**பாராட்டுகிறோம்**



கடந்த 2001 டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 10 பாடங்களிலும் விஷேடசித்தி (10ஏ) பெற்ற 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் வசிக்கும்

**செல்வி ஜெரீனா தங்கவேல்**

(வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

அவர்கள் மேலும் பல சிறப்புக்களையும் உயர்வுகளையும் பெற எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

மாமா
திரு.க.வாமதேவன் குடும்பத்தினர்.
இல.63,சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (2937) (G.S.)

**நவக்கிரி - புத்தூர்**
**சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் நடத்திய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

14.04.2002 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசு பெறும் இலக்கங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு:- இல.929
இரண்டாம் பரிசு:- இல.112
மூன்றாம் பரிசு:- இல.1093

ஆறுதல் பரிசுபெறும் இலக்கங்கள்:
2126, 2777, 1586, 2521, 1921, 1455, 957, 2115, 604, 2720.
- நிர்வாகிகள்.
(2914)

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம் இலங்கை

**ஜப்பானிய மொழிக் கற்கைநெறி**

மேற்படி ஜப்பானிய மொழிக் கற்கைநெறி மூலம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஜப்பானிய மொழியை ஒரு பாடமாகத் தெரிவுசெய்ய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விவரங்களை நேரில் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி : 2002-04-30

- கற்கைநெறிக் காலம் : 40 மணி நேரம்
- பதிவுக் கட்டணம் : ரூபா 100/-
- கற்கைநெறிக் கட்டணம் : ரூபா 3000/- (3 தவணைகளில்)

எதிர்வரும் 15.05.2002இலிருந்து வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

சோ.பத்மநாதன்
செயலாளர்
பொ.அரவிந்தன்
கல்வித்திட்டப் பணிப்பாளர்
(C/21740)


## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு புதிய தலைவர்

கொழும்பு,ஏப்.17

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இயக்குநராக பொலீஸ் அத்தியட்சகர் ஈ.டி.கே. றொட்ரிக்கோ நியமிக்கப்பட்டிருக்கின்றார். பதில் பொலீஸ் மா அதிபரினால் இந்நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்பிரிவின் இயக்குநராகக் கடமையாற்றிய பொலீஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்ன தேர்தல்கால வன்முறைகள் தொடர்பாக கைது செயயப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரது சேவையும் இடைநிறுத்தப்பட்டிருககிறது.

## கராத்தே சங்கக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்ட கராத்தே சங்கக் கலந்துரையாடல் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். கலந்துரையாடலில் நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (5)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஏப்.17

அம்பன் முருகன் கோயில் வருடாந்த மணவாளக்கோல உற்சவம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகி ஆனி உத்தரத் தினத்தன்று திருக்கல்யாணப் படிப்புடன் பூர்த்தியடையும். மறுநாள் அன்னதானமும் அதற்கு அடுத்தநாள் வைரவர் மடையும் இடம்பெறும். (7-173)

★ ★ ★

வடமராட்சி,ஏப்.17

தென்புலோலி சித்திவிநாயகர் கோயில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும். (7-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.17

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், 27ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (7-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.17

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அலங்கார உற்சவம் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதி சங்காபிஷேகமும், 24ஆம் திகதி திருக்குளிர்த்தி அபிஷேகமும், 26ஆம் திகதி மாலை 6 மணிக்கு வைரவர் சாந்தியும் நடைபெறும். (7-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.17

இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 3 மணிமுதல் விசேட பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் வெளிவீதியுலா வருவார். (-7)


**தேவை**

தமிழ், ஆங்கில கொம்பியூட்டர் ரைப்பிங் CoralDRAW தெரிந்த அனுபவம் உள்ள ஆண்/பெண் தேவை.

தொடர்பு:
SRI MURUGAN
COMPUTER SYSTEMS
303, K.K.S. ROAD,
JAFFNA.
T.P.:- 3588
(C/21746)

**மேற்பார்வையாளர் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு சிங்களம் தெரிந்த மேற்பார்வையாளர் தேவை.
உடன் நேரில் வரவும்.

ஹோட்டல் றொலக்ஸ்,
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(2934)





கொழும்பில் உள்ள ஜோன் கீல் (JOHN KEELS) நிறுவனத்தின் பொது முகாமையாளர் சந்திம பெரேரா அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அலுவலக உபயோகத்துக்கான ரொஷிபா உற்பத்திகளான போட்டோப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், நோட்டிக் கணனிகள் ஆகிய தொலைத் தொடர்புத் தொகுதியின் விற்பனை முகவராக 'வீல் மூவர்ஸ்' நிறுவனத்தை அவர் நியமித்துள்ளார்.

அந்நிறுவன உரிமையாளர் மு.அருந்தவநாதன், சந்திம பெரேராவிடம் இருந்து முகவருக்கான கடிதத்தைப் பெற்றுக்கொள்ளும்போது எடுக்கப்பட்ட படம். (ம-3)


**பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களின் கவனத்துக்கு**

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறுகின்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களை இன்று (17-04-2002) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கலாசாலைக்குத் தவறாது வருகைதருமாறு மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

மாணவர் ஒன்றியம்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.
(2936)

**திக்கம் வடிசாலையில் கட்டட வேலைகளுக்கு**
**கூறுவிலை கோருதல்**

திக்கம் வடிசாலையில் மேற்படி வேலை தொடர்பாக விநியோகிக்கப்பட்டு வரும் கேள்விப் பத்திரத்தைப் பெற்று செய்ய வேண்டிய வேலைகளையும் பார்வையிட்டு எதிர்வரும் (25.04.2002) வியாழக்கிழமைக்கு முன்னர் கூறுவிலைகளை திக்கம் வடிசாலையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். 29.04.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு திக்கம் வடிசாலையில் கேள்விப் பத்திரங்கள் திறந்து பரிசீலிக்கப்படும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.
திக்கம் வடிசாலை,
அல்வாய்.
(C/21741)


## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராஜா சிவராஜா

(வண்ணை - சே.சிவராஜா)

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா சிவராஜா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி; ஆசிரியர் KINGSTON INTERNATIONAL COLLEGE - COLOMBO) 15.04.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெ.சேனாதிராஜா - கமலாம்பிகையம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கா.வைத்தியலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் விமலநாயகியின் அன்புக் கணவரும் மகிந்தன் (Australia), திருமதி சாந்தினி சச்சிதானந்தன் (London), சேனாதிபதி (London) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சச்சிதானந்தனின் (London) அன்பு மாமனாரும் திருமதி பர்வதலக்ஷ்மியின் (Australia) அன்புச் சகோதரரும் சண்முகம் (Australia), திருநிலைநாயகி, K.V.மகேந்திரன், சொரூபராணி, தவராணி, கமலராணி, இந்திராணி, K.V.சுசீந்திரன், K.V.ரவீந்திரன், மகேஸ்வரி, நந்தினி, பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கீர்த்திசிங்கம் மற்றும் கனகரெட்ணம், துவாரகன், சண்முகலிங்கம், சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் சகலனும் சபேசன் (Australia), திரு.திருமதி சுபாஷினி சத்தீஸ்வரன் (Newzealand), காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2002) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பி.ப.2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணிக்குத் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

79/8, W.A.சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
T.P.074-513848.
(2933)

தகவல்:
சி.மகிந்தன்
(மகன்).

### கந்தையா பாலசுப்பிரமணியம ஜே.பி.

(மணி மாஸ்டர்)

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு இருபாலையையும் தற்போது கொழும்பையும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் (சமாதான நீதிவான்) அவர்கள் 15.04.2002 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னாள் சேவையாளரும், கொழும்பு, கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவல் சபை முன்னாள் செயலாளரும், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறங்காவலருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.04.2002) வியாழக்கிழமை கொழும்பில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
131,சங்கமித்தை மாவத்தை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
தொலைபேசி- 01-338937
(2929)

தகவல்:
ச.பாலசண்முகநாதன்
(மைத்துனர்),
நல்லூர்,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆவது நாள் நினைவலைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மண்ணில் மலர்ந்தது 25.02.1922

விண்ணில் விரைந்தது 17.03.2002

## திருமதி ஐயாத்துரை சிவயோகம்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த அறிவுப் பெட்டகமே!
ஆதரித்து எமை வளர்த்த நற்பண்பின் சிகரமே!
அமைதியான பேச்சும் அன்பான வாஞ்சையுடன் கூடிய
அன்புக் கருணைப் பார்வையும் இனிநாம் காண்பதெப்போ?
நீங்கள் எம்முடன் வாழ்ந்த நாள்கள் நெஞ்சில்
என்றும் நிலையாய் நிலைத்து நிற்கின்றதம்மா!
சிவபெருமானின் திருவடிகளை சிவ யோகமாய்ச் சேர்ந்தீரோ?

உங்கள் ஆத்மா சாந்திபெற நாங்கள்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் நினைவாக எமது இல்லத்தில் இன்று (17.04.2002) புதன்கிழமை காலை 9.00 மணியிலிருந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குலம் கிறீம் ஹவுஸ்*
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

- மக்கள், மருமக்கள்.

(C/21742)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை இலட்சுமி (வதனி)

இலட்சுமித் தியேட்டர் ஒழுங்கை, நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இலட்சுமி நேற்று (16.04.2002) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் சிறீதர் (கணேசன் - கனடா), சிறீஸ்கந்தவேல் (கனடா), சிறீஸ்கந்தராசா (உரிமையாளர், சாயி முகவர் அஞ்சலகம் - வெள்ளவத்தை), வசந்தி ஆகியோரின அன்புத் தாயாரும் வலலிபுரம் கனகம்மா, ஆறுமுகம் கந்தப்பு, சிவஞானம் சரஸ்வதி, சத்தியமூர்த்தி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகா (கனடா), சிவரூபராணி, ராஜினி, ஜெயதேவா (ஆசிரியர், கம்பர்மலை அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் விமலாவதி கந்தப்புவின் அன்பு மைத்துனரும், பிரதீப், பிரபு, சுஜீவன், கௌசிகா, சங்கவி, ஹரீஸ், பிரியங்கா, பிருந்தா, குகப்பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2002) செவ்வாய்க் கிழமை சோனப்பு மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சத்தியமூர்த்தி
(மைத்துனர்)

*நெல்லியடி.*

(C/21747)

## செல்லத்துரை பாலேந்திரா

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலேந்திரா 14.04.2002 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானர்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், இராசையா - மங்கையற்கரசி தம்பதியின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுபாஜினி, பிரகலாதன், செல்வேந்திரா, இராஜேந்திரா, ரவிந்திரா, தபேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவராஜாவின் அன்பு மாமனாரும், சாயகி, வேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் இரத்தினலிங்கம், சபாநாதன் (லண்டன்), இராமஜெயம் (கனடா), லீலாவதி (கெருடாவில்), செல்வராணி (கனடா) ஆகியோரின் அனபுச் சகோதரனும் குலசிங்கம் (கெருடாவில்), கந்தசாமியார் (கனடா), குணசேகரம் (கெருடாவில்), குலசேகரம் (கனடா), சோதிமலர் (லண்டன்), இந்துமதி (லண்டன்), விஜயலட்சுமி (கனடா), திலகவதி (கெருடாவில்) ஆகியோரின அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-04-2002 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலசிங்கம்

*கெருடாவில்,*
*தொண்டமானாறு.*

(2942)


# தமிழ் - சிங்கள மக்களின் இன்பகரமான சமாதானத்துக்கு

# எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

இங்கு நம் மக்களின் "பொங்குதமிழ்" சிறக்க
மங்காப் புகழ்பெற்று மாண்புடன் திகழ
பேரின்ப நிகழ்ச்சி தமிழ் எழுச்சி விழாவாக மலர
நிகழ்வை நிகழ்த்துவோருக்கு
எமது உளமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## திரு.தே.இம்மானுவேல்பிள்ளை,

**ALL CEYLON DISTRIBUTORS,**
**130, 132, K.K.S. Road,**
**Jaffna.**

எமது ஸ்தாபனம் 18.04.2002 வியாழனன்று குறிப்பிட்ட சில ஆங்கிலப் புத்தகங்களை மட்டும் காலை 9.00 - 6.00 மணிக்குள் அன்பளிப்பாக வழங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உயர்தர பாட வைத்தியம், சட்டம், பொருளியல், கணக்கியல், தாவரவியல், விலங்கியல், கணனியியல் மற்றும் சிறுவர் ஆங்கில நூல்கள் மட்டுமே!

(C/21748)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக மருத்துவ பீட மைதானத்தை பிற்பகல் 3.30 மணிக்கு வந்து சேர்ந்ததும் 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

'பொங்குதமிழ்' தீபம் ஏற்றப்பட்ட பின்னர் 'பொங்குதமிழ்' பிரகடனம் வெளியிடப்படும்.

அதைத் தொடர்ந்து இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.பல்கலைக் கழக, கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர்கள், முஸ்லிம் சகோதரர் கள், மனிதநேய அமைப்புப் பிரதி நிதிகள், யாழ்.பல்கலைக்கழக ஊழி யர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்ற இருக்கின்றனர்.

நிகழ்வுகளில் பொதுமக்கள் பங்கு பற்ற வசதியாக விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள் ளன.

காலை 10 மணிமுதல் போக்கு வரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தால் மக்கள் காலையிலேயே நிகழ்வு களில் பங்குகொள்ளத் தயாராகும்படி ஏற்பாட்டாளர்கள் மக்களைக் கோரி யுள்ளனர்.

அனைத்து மக்களையும் அணி அணியாகக் கலந்துகொண்டு அபி லாஷைகளை வெளிப்படுத்துபடியும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ம3-10-51)

## நிதிபெறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச சூழ்நிலையில் மக்களின் இயல்பு வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத் தும்வகையில் மக்களின் எதிர்பார்ப் பிற்கேற்ப வழன்மயான நடவடிக்கை களில தளர்வுகள் ஏற்படுத்தப்பட டுளளன. மேலும் எமது பொருளா தாரம் மேம்பட தற்போதுள்ள நடை முறையில மேலும் பல தளர்வுகள் ஏற்படுத்தப்படும்.

அத்துடன், எமது இயக்கத்தின் நலனை கருத்திற்கொண்டு மக்களால் தரப்படும் அன்பளிப்புக்களை நாம் ஏற்றுக்கொள்வோம் - என்று தெரி வித்தார்.

(ம-3)


முன்னோடிப் பரீட்சை
G.C.E. (A/L) 2002
உயிரியல்
M.C.Q.
18.04.2002
வியாழன்
9 - 11
NEW SCIENCE HALL
JAFFNA.
(2935)


## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கும் நோக்குடன் புதிய நடை முறை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைப்படி -

யாழ்ப்பாணத்திலிருந்து செல் வோருக்கு முகமாலை சோதனை நிலையத்தில் வைத்து உள்நுழைவு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவர்கள் வன்னிக்குள் சென்று திரும்பும்போது முகமாலையில் அந்தப்பத்திரத்தை மீள ஒப்படைக்க வேண்டும்.

வவுனியாவுக்குச் செல்பவர்கள் ஓமந்தை சோதனை நிலையத்தில் அந்த அனுமதிப்பத்திரத்தை ஒப்ப டைத்து விட்டு மேற்கொண்டு பயணிக் கலாம்.

ஐந்து நாள்களுக்கு மேல் வன்னி யில் தங்கிவிட்டு வவுனியா, கொழும் புக்கு செல்ல விரும்புவோர் வன்னி யில் உள்ள வழமையான நடைமுறைப படியே அனுமதி பெற்று பயணத்தை மேற்கொள்ள முடியும்.

வன்னியில் ஐந்து நாள்களுக்கு மேல் தங்கிவிட்டு யாழ்ப்பாணம் திரும்பு வோர் உள்நுழைவு அனுமதிப்பத்தி ரத்தை முகமாலையில் கையளித்து விட்டு பயணத்தைத் தொடரலாம்.

இந்த உள்நுழைவு அனுமதிப்பத்தி ரத்துக்கு கட்டணம் எதுவும் அறவிடப படமாட்டாது - என்றார். (ம-3)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் கட்டப்பட்டிருந்த பதாகை களும் கொடிகளுமே அறுத்தெறி யப்பட்டுள்ளன. அத்துடன் அறுத் தெறிந்த பாதகைகளை அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

சின்னமடுச் சந்தியில் வைக்கப்பட்டி ருந்த தலைவர் பிரபாகரனின் உரு வப்படம் அடித்து நொறுக்கப்பட்டுள் ளது. சில இடங்களில் கட்டப்பட்டி ருந்த பொங்குதமிழ் பதாகைகளும் அறுக்கப்பட்டுள்ளன.

இந்த அடாவடித்தனங்கள் குறித்து தீவுப் பகுதிமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் அங்கு ஒரு வித பதற்றமான சூழலும் நிலவு கின்றது.

இதற்கிடையில் -

அண்மையில் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப் பட்ட வேலணை - வங்களாவடி வீதி மீண்டும் மூடப்பட்டுள்ளது. 'வீதி தடை செய்யப்பட்டுள்ளது.' என்று அறிவித் தல் பலகை வீதியில் குறுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-167)

## பொங்குதமிழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அடங்கிய குழுவொன்று இன்று குடாநாட்டுக்கு வரவிருக்கின்றது.

இந்த நிகழ்வு தொடர்பான செய்தி களைச் சேகரிக்கவென பெரும் எண் ணிக்கையான ஊடகவியலாளர்களும் தெற்கில் இருந்து வருகின்றனர்.

(ம-3-10)


☆ பொங்குதமிழ் சிறக்க வாழ்த்துகின்றோம் ☆
- யாழ்.மத்திய கல்லூரிச் சமூகம்.
(C/21743)


## அன்னை பூபதி நினைவுதினம் அனுஷ்டிப்பு

இந்திய அமைதிப்படைக்கு எதி ராக உண்ணாநோன்பு இருந்து மரணித்த அன்னை பூபதியின் நினைவு தின மான எதிர்வரும் 19ஆம் திகதி மாபெரும் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நல்லூரில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் அன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் இக்கூட்டத்தில் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ மக் களைக் கலந்து கொள்ளுமாறு கூட்ட ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

(ம-3)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தடையை நீக்குவது குறித்து இந்தப் பேச்சுக்களில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படு கின்றது.

இது தொடர்பாக அரசு ஏற்கனவே ஆராய்ந்து வருகின்றது. புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் ஆலோசனையை அரசு பெற்றிருக் கின்றது.

தாய்லாந்தில் ஜுன் மாதத்தில் நடத்தப்படவுள்ள பேச்சுக்கு முன்னர் தம்மீதான தடை நீக்கப்படவேண் டும் என்று விடுதலைப் புலிகள் வலி யுறுத்திவருவது தெரிந்ததே. (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வுக்கான பாதை மிகமிகக் கஷ்டமானதாக இருக்கும். பேச்சுக்கள் முறியும் நிலைகள் ஏற்பட வும் வாய்ப்புக்கள் உண்டு. இதைத் தான் அமெரிக்காவும் கூறிவருகின்றது.

நாங்கள் அந்த இலக்கை அடைய முடியும் என நான் நம்புகின்றேன். ஆனால் அது மிகமிகக் கஷ்டமான பயணமாக இருக்கப்போகின்றது.

நாங்கள் எதிர்நோக்கப் போகின்ற தடைகள் குறித்து நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.

புலிகளின் ஆயுதக் கடத்தல்கள் பழைய மாதிரியே தொடர்கின்றன என்ற தகவல் எனக்கு ஆச்சரியத்தைத் தர வில்லை. அந்த கடத்தல் வலைப்பின னல் இன்னும் செயற்படுவதாகவே எமது புலனாய்வுத் தகவல்களும் கூறு கின்றன.

எனது அரசும் புலிகளும் ஒரு தரப பில் மற்றத் தரப்பு முழு நம்பிக்கை வைத்திராத அதே சமயத்தில் சமா தானப் பேச்சுக்களை எப்படி முன்னெ டுப்பது என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றன. எனவே இத்தகைய நடவடிக்கைப் போக்கில் இது சகஜமே.

ஒரு புறம் யுத்தம் நடக்க மறு புறத்தில் பேச்சு நடத்தலாம் என்ற எண்ணம்கூட முன்னர் இருந்தது. அத னுடன் பார்க்கையில் தற்போதைய நிலைமை முன்னேற்றகரமானது.

ஏதேனும் மோதல்கள் இருக்குமா னால் அது மக்கள் சம்பந்தப்படாத - கடலில் மட்டுமேயான - மோதலாக அமையும் - என்றார். (இந்தப் பேட்டி யின் முழுவிவரமும் நாளைய உதய னில் வெளியாகும்.) (ம)


OXFORD INSTITUTE
K.K.S. Road, Chunnakam.
A/L 2002 தமிழ்
இலவச வழிகாட்டல் கருத்தரங்கு
காலம்:- 19-04-2002 வெள்ளி
(2923) நேரம் 9 -12 a.m.
மீண்டும் யாழ்.மண்ணில் பிரபல ஆசிரியர்
திரு.குழந்தை
இடவசதி 200 பேருக்கு மட்டுமே!



BIT
விரிவுரைகள் ஆரம்பம்
BIT Semester - 2, Semester - 4 மாணவர்களுக்குரிய விரிவுரைகள் எதிர்வரும் (20.04.2002) சனிக் கிழமை காலை 9 மணிமுதல் ஆரம்பமாக இருக்கின்றன. அனை வரும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
குறிப்பு:-
யாழ்.மாவட்டத்தில் BIT கல்வியை மேற்கொள்ளும் அனைத்து மாணவர் களும் இப்பிரிவில் இணைந்து கொள்ளலாம்.
இயக்குநர்,
IIS
யாழ்ப்பாணம்.
(C/21744)


## சாரணியப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.17

பெண் சாரணிய குழுத்தலைவிப் பயிற்சி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் மறுநாள் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி யில் இடம்பெறவுள்ளது.

(ம-3)

## அரசியல்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகம், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றிற்கு உயிரூட்டும் பொங்குதமிழ் நிகழ்ச்சி யாழ்.மாவட்டத்தில் இன்று புதன் கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளதை எல்லோரும் அறிவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தமிழர் கூட்டமைப்பு ஆதர வாளர்கள் பொங்குதமிழ் விழாவிலும் ஊர்வலத்திலும் கலந்து தமிழ்த் தேசத்தினதும், தமிழ்த் தேசிய இனத் தினதும் விடுதலைக்குப பங்களிப்புச் செய்ய வேண்டுமென அழைப்பு விடுக் கிறேன் - என்று கூறியுள்ளார்.

### ரெலோ தலைவர்

யாழ்ப்பாணத்தில் எழும் எழுச்சி யைத்தான் சர்வதேசமும் அவதானித் துக் கொண்டிருக்கிறது. எனவே இங் குள்ள மக்கள் எழுச்சியுடன் பொங்கு தமிழ் நிகழ்வுகளில் பங்குபற்ற வேண் டும். மக்கள் பொங்கியெழுந்து தமது பங்களிப்பை வழங்கவேண்டும் - என்று கூறியுள்ளார்.


எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரசாந்த், சிம்ரன், வடிவேல் நடித்த
தமிழ்
I.T.N. வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்.
305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
(C/21752)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
தமிழ்
பிரதிகள் உடன்பெறலாம்
வீடியோ விமல்,
(C/21750) யாழ்ப்பாணம்.



புதிய வீடியோ CD வெளியீடுகள்
★ தமிழ்
★ ராஜியம்
பிரதிகள் உடன்பெறலாம்
விஷ்ணு வீடியோ
(2941) கோண்டாவில்.


## புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் செல்வதற்காக வன்னிக்கு வருபவர்கள் பகல் 1.30 மணிக்கு முன் வன்னிக்குள் வந்து விடவேண்டுமென புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முகமாலை சோதனைச் சாவடி 4.30 மணியுடன் மூடப்படுவதால் அதற்கு முன்னர் அங்கு சென்றடை யக்கூடிய வகையில் பயணிகளை வன்னிக்கு வருமாறு அவர்கள் தெரி வித்துள்ளனர். (ம-6-12)

## வழக்குகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபருடன் அமைச்சர் ஜயலத் ஜய வர்த்தனா பேசினார்.

அதனையடுத்தே அமைச்சருக்கு சட்டமா அதிபர் மேற்கண்ட தகவலைத தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்குப் பொறுப்பான அரச சட்டத்தரணியை இந்தக் குழு அழைத்துப் பேசும். சந் தேக நபர்கள் தொடர்பான ஆவணங் களையும் குழு பரிசீலிக்கும்.

சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டிருந்த காலம், அவர்கள் கைது செய்யப்பட்ட சூழ்நிலை, அவர்களுக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் ஆகிய வற்றின் அடிப்படையில் சந்தேகநபர் களுக்கு நிவாரணம் அளிக்கக் குழு வுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது.

வழக்குகளைத் தொடர வேண்டிய தில்லை என்று குழு தீர்மானித்தால் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளுடன் குழு தொடர்பு கொண்டு தனது முடிவை அறிவிக் கும்.

- இவ்வாறு சட்டமா அதிபர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித் துள்ளார்.

(ம)


ஈசன்
கல்வி நிலையம், கோண்டாவில்.
அறிவித்தல்
சடமும் கதிர்ப்பும்
இறுதிவகுப்பு:18-04-2002 (THU.)
மாலை 4 - 6.30 வரை
நடைபெறும்.
PAPER CLASS
(A/L 2003 இற்கானது)
வழமையான நேரப்படி நடைபெறும்
திரு.குமரன் B.Sc.
(2939)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### சாந்தாதேவி சண்முகநாதக்குருக்கள்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தாதேவி சண்முகநாதக்குருக்கள் நேற்று (16.04.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதக்குருக்களின் (நல்லூர் கந்தசுவாமி கோயில்) பாசமிகு மனைவியும் உமாகாந்தன் (I.C.R.C. மட்டக்களப்பு), ஸ்ரீதரன் (முன்னாள் ஊழியர், இலங்கை வங்கி), சதானந்தன் (யாழ/வயம்ப பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், மங்கையர்க்கரசி, சசிகலாதேவி, பத்மலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2002) புதன்கிழமை பிற்பகல் நடைபெறும்.

*138,கோயில் வீதி,*
*(மணிமண்டபம் அருகில்)*
*நல்லூர்.*

தகவல்:
**மக்கள்**

(2943)

### திருமதி கமலாசனி கனகசிங்கம்

108,புங்கங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த திருமதி கமலாசனி கனகசிங்கம் நேற்று (16.04.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கிளறிக்கல் முத்தையா - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற Dr.V.A.கனகசிங்கத்தின் அன்பு மனைவியும் திருமதி பத்மாசனி இராசையா, சதானந்தன், செல்வி நீலோசனி, திருமதி வனசாட்சி, தேவதாஸன், செல்வி தவமணி, யோகானந்தன், கணே சானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகநாயகி, கருணைநாயகி, கமலநாயகி, பரமானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினசிங்கம், விமலராசா, வஸ்தியாம்பிள்ளை, இந்திரா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*108,புங்கங்குளம் வீதி,*
*அரியாலை.*

தகவல்:
**விமலராசா**
(மருமகன்)

(C/21753)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 - 05 - 1979



இறப்பு 12 - 04 - 1997

**அமரர் சின்னராசா குமரேஸ்வரன்**
(ராசன்)
திதி:- 17-04-2002

*எங்கள் அன்புச் செல்வமே! ராசன் நீங்கள்*
*எம்மைவிட்டுப் பிரிந்து சென்று இன்று*
*ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்*
*துயர் தாங்காது துடிக்கின்றோம் நாம்;*
*உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை*
*விட்டு என்றும் அகலவே அகலாது ராசனே.*

*கே.கே.எஸ். றோட்,*
*நாச்சிமார்கோயிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

*சின்னராசா*
*குடும்பத்தினர்.*

(C/21749)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org